# சமூக அறிவியல்

## பகுதி - 2

## வகுப்பு V

Social Science
Standard V
Part II

Tamil Medium

கேரள அரசு
கல்வித் துறை

தயாராக்கியது

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2015

JT 559-1/ Soc. Science (T)-5 (Vol-2)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695 012, Kerala

*Website* : www.scertkerala.gov.in
*E mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT
First Edition : 2014, Reprint : 2015
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே,

சமூகஅறிவியலின் கற்றல் பகுதி என்பது தனிமனிதனுக்குச் சமூகத்துடனும் இயற்கைக்கையுடனும் உள்ள உறவாகும். மனிதனின் கடின உழைப்பும் ஒற்றுமை உணர்வும் தான் நமது கலாச்சாரமும் நாகரிகமும் தோன்றக் காரணமாக அமைந்தன. சமூக வாழ்க்கையின் சிறப்பான நிலைபேற்றிற்கும் பாதுகாப்பிற்கும் ஒன்றுபட்ட செயல்பாடுகள் இன்றியமையாததாகும். மாறுகின்ற காலத்தின் சவால்களைத் திறமையாக எதிர்கொள்ளவும் விழிப்போடு முன்னேறவும் சமூக அறிவியல் கல்வி துணைபுரியும். சிறந்த குடிமகனாக வளர்வதற்கும் சமூக நன்மைக்காகச் செயல்படுவதற்கான அறிவும் மனநிலையும் திறன்களும் வளர்வதற்கும் இக்கல்வி துணைபுரியும்.

இத்துறையில் மேலும் தேடல்களை நடத்தவும் அவற்றைச் சமூக முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தவும் இயலும் என நம்புகிறேன்.

வாழ்த்துகளுடன்

**முனைவர் எஸ். இரவீந்தரன் நாயர்,**
இயக்குநர்
எஸ்.சி.இ.ஆர்.டி

# Text book Committee

## Participants

**Abdul Hameed .V**
HSA, MUMVHS, Vadakara, Kozhikode.

**Abdul Samad. K.C**
HSST, GHS Vadakara,
Puthoor (P.O), Kozhikode.

**Chithra Madhavan**
Research Officer SCERT.

**Easha. V.K**
UPSA, AMLPS Vettikkadu,
Perinthalmanna, Malappuram.

**Gopakumar .G .P**
Lecturer, DIET, Kollam.

**Hari Pradeep. S**
HSA, SVHS Pullad, Thiruvalla.

**Hari . V**
UPSA, Unity AUPS, Thenkara.

**Jayakrishnan. O.K**
KPCHSS, Pattanoor, Kannur.

**Nishanth Mohan. M**
HSST, GGHSS, Karamana, Tvpm.

**Nisha. M.S**
UPSA, PHSS, Mezhuveli, Pathanamthitta.

**Rajan. K**
GUPS,Thiruvazhiyodu, Palakkad.

**N. Sukumaran**
GVHSS for Girls, Manacaud, Tvpm.

**Varghese Pothan**
HSST, St.Johns HSS Mattom, Mavelikkara.

**Yoosuf Kumar. S.M**
HSST, GMBHSS, Attingal.

## Experts

**Dr. Abdul Rasak. P.P**
Associate Proffesor Dept.of History
PSMO College,Thirurangadi.

**Dr. N.P. Hafeez Mohammd**
Associate Prof. (Rtd), Dept.of Sociology,
Farook College, Kozhikode.

**Mahalingam .S**
Associate Prof. (Rtd),
Dept.of. Geography, Govt. College Chittur.

**P.S. Manojkumar**
Asst. Prof., Dept.of History,
KKTM College,Kodungallur, Thrissur.

**Dr. Neelakandan**
Associate Prof. (Rtd.), Dept. of Geography,
University College, Tvpm.

**Dr. Priyesh.M**
Asst. Prof. Dept. of Economics,
University College, Tvpm.

**Dr. VenuMohan**
Asst. Prof., Dept. of History,
Govt. College, Nedumangad.

## Academic Co-ordinator

**Dr.N. Kala,** Research Officer, SCERT.

**S. Padmakumar**
HSA, GHS Koovakkad, Kollam.

**Durairaj .S**
GUPS, Pambanar.

**Mary Stella Rosaline**
HSA (Rtd.) GGHSS Karamana.

**Unnikrishnan. I**
HSA, IGMMRS Nilambur, Malappuram.

**Dr. Nisha Raffi**
Asst. Prof. Dept. of Tamil,
Univrersity College, Tvpm.

## Academic Co-ordinator

**Dr. Sahaya Dhas D,** Research Officer, SCERT.

# உள்ளடக்கம்



7. இரும்பு ஏற்படுத்திய மாற்றங்கள்... 87



8. அகிம்சை, அறிவு, அதிகாரம்......97



9. மக்கள், மக்களுக்காக......................108



10. கேரளக் கரையில்..........................119




11. நமது இந்தியா................................134


இந்தப் புத்தகத்தில் நம் வசதிக்காகச் சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.


அதிக வாசிப்புக்கு
(மதிப்பிட வேண்டியதில்லை)


கற்றல் முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் கேள்விகள்


தொகுப்பு


முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை


மதிப்பிடலாம்


தொடர்ச் செயல்பாடுகள்









# 7

# இரும்பு ஏற்படுத்திய மாற்றங்கள்





படம் 7.1

கொடுக்கப்பட்டிருக்கும் பழங்கால இந்திய நிலப்படத்தில் அடையாளப் படுத்தப்பட்டுள்ள நதிகள் எவை?
கண்டுபிடிக்கவும்.

- சிந்து
-
-
-
-
-
-

இவற்றுள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ளவை எவை? சிந்துவும் அதன் துணை நதிகளுமாகும். நாம் விவாதித்த ஹரப்பா நாகரிகம் வளர்ச்சியடைந்தது இந்நதிக்கரையிலாகும். சுமார் 3500 வருடங்களுக்குமுன் ஆரியர்கள் என அழைக்கப்பட்ட ஒரு மக்கள் பிரிவினர் இப்பகுதியில் குடியேறினர். வேதங்களிலிருந்து இவர்களைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. வேதங்களின் மொழி வடமொழியாகும். ஆரம்ப காலங்களில் வேதங்கள் வாய்மொழியாகப் பரப்பப்பட்டன. வேதங்களில் கூறப்பட்டிருக்கும் மனித வாழ்க்கை நிலைபெற்றிருந்த காலம் வேதகாலம் என அறியப்படுகிறது. வேதங்களைப் பற்றிய தகவல்கள் அடங்கிய நழுவு படத்தைக் கவனிக்கவும்.




இதிலிருந்து என்னென்ன தகவல்கள் கிடைக்கின்றன?

- கி.மு. 1500 முதல் கி.மு 600 வரையிலான காலமே வேதகாலமாகும்.
- முதலில் இயற்றப்பட்டது ரிக் வேதமாகும்.
- ரிக்வேதத்தில் கூறப்பட்டிருக்கும் வாழ்க்கை நிலைபெற்றிருந்த காலம்.
- 
- 
- 

## கால்நடைகள் செல்வமாகும்போது...

ரிக்வேத கால ஆரியர்களின் வாழ்க்கையைப் பற்றி வரலாற்று ஆசிரியரான **A.L.** பாஷாம் சொல்வதைக் கவனியுங்கள்.

"கால்நடைகள் கிடைப்பதற்காக விவசாயிகள் பிரார்த்தனை செய்தனர். போர் வீரர்களும் கால்நடைகளைப் பிடித்தெடுப்பதற்காகவே போர் செய்தனர். கால் நடைகளை ஊதியமாகப் பெறுவதற்காகவே அந்தணர்கள் யாகங்களைச் செய்தனர்.''

இக்காலக்கட்டத்தில் கால்நடைகளுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது?

ரிக்வேதகாலத்தின் செல்வம் கால்நடைகளாக இருந்தது. மக்களின் முக்கியமான தொழில் கால்நடை வளர்த்தலாகும். அத்துடன் வேளாண்மையும் செய்திருந்தனர். பார்லி முக்கியமான விளைபொருளாக இருந்தது. இவர்கள் கோத்திரங்களாக வாழ்ந்திருந்தனர். இவ்வாறான ஒவ்வொரு கோத்திரத்தினுடையவும் தலைவர் ராஜா என அழைக்கப்பட்டார். கால்நடைகளுக்காகக் கோத்திரங்களுக்கிடையே போர்கள் நடைபெற்றன. கோத்திரங்களுக்கிடையேயும், கோத்திரங்களுக்கும் ஆரியர்கள் அல்லாதவர்களுக்கிடையேயும் போர்கள் நடைபெற்று வந்தன. குதிரைகளும், செம்பினாலும் வெண்கலத்தினாலுமான ஆயுதங்களும் ஆரியர்களிடம் காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்தி ஆரியர்கள் அல்லாதவர்களை ஆரியர்கள் கீழடக்கினார்கள். கீழ்ப்படுத்தப் பட்டவர்கள் தாசர்கள் எனவும், தஸ்யூக்கள் எனவும் அறியப்பட்டனர். அவர்களது கால்நடைகளை ஆரியர்கள் கைப்பற்றினர்.



கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் ரிக் வேதகால வாழ்க்கையை ஹரப்பாவின் வாழ்க்கையோடு ஒப்பிடவும்.

- தொழில்
- கருவிகள்

ரிக்வேதகாலத்தில் மக்கள் இந்திரன், வருணன், அக்னி போன்ற தேவர்களையும் அதிதி, உஷஸ் போன்ற தேவதைகளையும் வழிபட்டிருந்தனர். அக்காலக்கட்டத்தில் சாம்பல்நிற மண்பாத்திரங்களைப் பன்படுத்தியிருந்தனர். படத்தில் காட்டப்பட்டுள்ளது அன்று பயன்படுத்தியிருந்த ஒரு மண் பாண்டத்தின் எஞ்சிய பகுதியே.



சாம்பல் நிற மண்பாண்டம்

## கங்கைச் சமவெளியை நோக்கி

சாமவேதம், யசூர்வேதம், அதர்வவேதம் போன்றவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனித வாழ்க்கை நிலைபெற்றிருந்த காலம், பிற்கால வேதகாலம் என அறியப்படுகிறது. ரிக்வேத காலத்தில் கால்நடைகளை மேய்த்து நடந்த ஆரியர்கள் பிற்கால வேதகாலமானபோது கங்கைச்சமவெளியை வந்தடைந்தனர். கங்கை நதியைச் சுற்றியுள்ள பகுதியே கங்கைச் சமவெளியாகும். கோத்திரங்களுக்கிடையேயான போர்களும், புதிய கோத்திரங்களின் தோற்றமும், மக்கள் தொகைப் பெருக்கமும் கங்கைச் சமவெளியில் ஆரியர்கள் வந்தடைவதற்குக் காரணங்கள் ஆயின.

நிலப்படத்தை (படம் 7.1) உற்றுநோக்கிக் கங்கைச் சமவெளி இந்தியாவின் எப்பகுதியில் அமைந்துள்ளது என்று கண்டுபிடிக்கவும். இன்று அப்பகுதி எந்தெந்த மாநிலங்களில் அமைந்துள்ளது எனக் கண்டுபிடிக்கவும்.
கங்கைச் சமவெளியின் தனித்தன்மைகளைச் சோதிக்கவும்.

- பெரிய மரங்கள் நிறைந்த காடுகள்
- செழிப்பான வண்டல் மண்
- அடைமழை

கங்கைச் சமவெளிக்கு வரும்போது ஆரியர்களிடமிருந்த ஆயுதங்கள் எந்த உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன?
செம்பினாலும் வெண்கலத்தாலும் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைப் பயன் படுத்திக் கங்கைச்சமவெளியில் மண்ணைப் பண்படுத்தவும், மரங்களை வெட்டவும் கஷ்டமாக இருந்தது. அதனால் அவர்கள் காடுகளைத் தீயிட்டு அழித்து முன்னேறினார்கள். ஆனால் மரங்களின் கடினமான அடிப்பகுதி அவர்களுக்குத் தடையாக இருந்தது. மண்ணைப் பண்படுத்தவும் மரங்களை வெட்டுவதற்கும் கடினமான உலோகத்தால் செய்யப்பட்ட ஆயுதங்கள் அவர் களுக்குத் தேவைப்பட்டன. இது இரும்பின் கண்டுபிடிப்பிற்குக் காரண மாகியது.




இன்று மண்ணைப் பண்படுத்தவும், மரங்களை வெட்டவும் நாம் பயன்படுத்தும் ஆயுதங்களும் கருவிகளும் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது?

செம்பு வெண்கலம் போன்றவற்றிலிருந்து இரும்பு எவ்வாறு வேறுபடுகிறது?

கங்கைச்சமவெளியில் பெருமளவில் இரும்புத்தாது காணப்பட்டது. இரும் பைக் கண்டுபிடித்ததும் கடினமான கருவிகளையும் ஆயுதங்களையும் அவர்கள் தயாரித்தனர். காடுகளை வெட்டி அழித்தனர். கலப்பைகளைப் பயன்படுத்தி நிலங்களை உழுதனர். வேளாண்மை முக்கியத் தொழிலாக மாறியது. இரும்பைப் பயன்படுத்திய இக்காலகட்டம் இரும்புக்காலம் என அழைக்கப்பட்டது.
கங்கைச்சமவெளியின் சூழ்நிலைகள் வேளாண்மைக்கு எவ்வாறு சாதகமாக அமைந்தன? உங்கள் கருத்துகளை எழுதவும்.
கால் நடை வளர்ப்பிலிருந்து வேளாண்மைக்கான மாற்றத்தின் விளைவுகள் எவையெனப் பார்ப்போம்.

- நிலையான வாழ்க்கை ஆரம்பித்தது
- வேளாண் உற்பத்தி அதிகரித்தது
- மீதமான உற்பத்திப் பொருட்கள் கைமாற்றம் செய்யப்பட்டன.

கங்கைச்சமவெளியின் மனித வாழ்க்கையில் இரும்பின் கண்டுபிடிப்பும் பயன்பாடும் உருவாக்கிய மாற்றங்களை விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.



வண்ணம் தீட்டிய சாம்பல் நிறப் பாத்திரங்களின் பாகங்கள்

பிற்கால வேதகாலத்தில் மக்கள் பயன் படுத்திய மண் பாண்டங்கள் வண்ணம் தீட்டிய சாம்பல் நிறப் பாத்திரங்கள் (Painted Grey Ware) என அறியப்பட்டது. அவற்றுள் சில வற்றின் எஞ்சிய பாகங்கள் தான் படத்தில் காட்டப்பட்டுள்ளன. மக்கள் நிலையான வாழ்க்கையை ஆரம் பித்ததும் அவர்களது வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் உருவா னது. சமூகத்தில் நிலைபெற்றிருந்த தொழிலின் அடிப்படையில் மக்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற இந்தப் பிரிவு நான்கு வர்ணம் என அழைக்கப்பட்டது.

ரிக் வேத காலத்தில் எந்தெந்தத் தேவர்களையும் தேவதைகளையும் மக்கள் வழிபட்டிருந்தனர்? பிற்கால வேதகாலத்தில் வழிபாட்டுமுறையின் முக்கியத்துவம் குறைந்தது. அதற்குப் பதிலாக யாகங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழிபாட்டுமுறை பரவலாகியது. கால்நடைகளைப் பெருமளவில் பலி கொடுக்கும் யாகங்கள் அதிகமாகக் காணப்பட்டன.

ரிக் வேத காலம் மற்றும் பிற்கால வேதகாலத்தின் சில தனித்தன்மைகள் கீழே கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை எந்தக் காலத்தைச் சார்ந்தவை என அவற்றிற்கு நேரான கட்டத்தில் குறிப்பிடவும்.

| தனித்தன்மைகள் | ரிக்வேதகாலம்/ பிற்கால வேதகாலம் |
|---|---|
| வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்தது | |
| யாகங்கள் பரவலாகியது | |
| இரும்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன | |
| முக்கியத் தொழில் கால்நடைகளை வளர்த்தல் | |
| நிலையான வாழ்க்கை தோன்றியது | |
| இந்திரன், வருணன் போன்ற கடவுள்களை வழிபட்டனர் | |
| வண்ணம் தீட்டிய சாம்பல்நிறப் பாத்திரங்களைப் பயன்படுத்தினர் | |

## கற்கள் கதை சொல்கின்றன

இரும்புக் காலத்தில் கேரளம் உட்பட்டிருந்த தமிழகத்தில் மக்கள் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது எனக் கலந்துரையாடலாம். பழங்காலத் தென்னிந் தியப் பகுதிகள் தமிழகம் என அறியப்பட்டது.


கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படங்களைக் கவனிக்கவும்


நாட்டு கல்


குடைக்கல்

பழங்காலத் தமிழகத்தில் பிணங்களை அடக்கம் செய்ததின் மேல்பகுதியில் நடப்பட்டிருந்த பெரிய கற்கள் தான் படத்தில் காட்டப்பட்டுள்ளன. பல்வேறு வடிவங்களில் இக்கற்கள் காணப்படுகின்றன. இவை மகாகற்கள் என அழைக் கப்படுகின்றன. பிணங்களை அடக்கம் செய்த கல்லறைகளிலிருந்து அன்றைய மக்கள் பயன்படுத்தி இருந்த இரும்பு ஆயுதங்கள், பல்வேறு கருவிகள், மண்பாண்டங்கள், தானிய மிச்சங்கள் போன்ற ஏராளமான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை அக்காலத்தைப் பற்றிய தகவல்களைத் தரும் சான்றுகளாகும் அதனால் இக்காலம் பெருங்கற்கால நாகரிகக்காலம் என அழைக்கப்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தைப் பாருங்கள். பெருங்கற்கால காலத் தில் மனிதர்கள் பயன்படுத்திய ஆயுதங்களும் கருவிகளும் தான் அதில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் இரும்பால் செய்யப்பட்டவை ஆகும்.


பெருங்கற்கால நாகரிகத்தில் பயன்படுத்திய இரும்புக் கருவிகள்




ஆரம்பகால தமிழகத்தில் இரும்புக் காலம் பெருங்கற்கால நாகரிகக் காலம் என அழைக்கப்பட்டது எதனால்? இது கற்காலத்திலிருந்து எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகிறது?

பழங்காலத் தமிழகத்தின் மக்கள் வாழ்க்கையைப் பற்றிப் பெருங்கற்காலச் சின்னங்களிலிருந்தும், பழந்தமிழ்ப் பாட்டுகளின் தொகுப்புகளிலிருந்தும் தகவல்கள் கிடைக்கின்றன. பழந்தமிழ்ப் பாட்டுகள் சங்ககால இலக்கியங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இவை சங்ககால இலக்கியங்கள் என அழைக்கப்படுவதன் காரணம் என்ன? மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திய பாண்டியர்களின் துணையோடு தமிழ்ப் புலவர்களின் ஒருங்கிணைப்பு பழங்காலத் தமிழகத்தில் காணப்பட்டது. இது சங்கம் என அழைக்கப்பட்டது. பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு போன்றவை சங்க இலக்கியங்களில் முக்கியமானவையாகும்.

பழங்காலத் தமிழகத்தைப் பாண்டியர்கள், சேரர்கள், சோழர்கள் போன்ற அரச வம்சங்கள் ஆட்சி நடத்தியிருந்தனர். இவர்கள் மூவேந்தர்கள் என அறியப்பட்டனர்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் நிலப்படத்தில் சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் ஆகியோர் ஆட்சி புரிந்த பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கேரளம் உட்பட்ட பகுதியில் ஆட்சி புரிந்த அரசவம்சம் எது எனக் கண்டுபிடிக்க முடியுமா?




சங்ககாலத் தென் இந்தியா

## பழந்தமிழ்ப்பாட்டின் வழியே...

சங்க இலக்கியங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி பழங்காலத் தமிழகம் ஐந்து நிலப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவை திணைகள் என அழைக்கப்பட்டன. திணைகளுக்கு அவற்றிற்கான புவியியல் தனித் தன்மைகள் காணப்பட்டன. அவை எவையெனப் பார்ப்போம்.

| திணைகள் | புவியியல் தனித்தன்மைகள் |
|---|---|
| குறிஞ்சி | மலைகள்/மலை சார்ந்த இடங்கள் |
| முல்லை | காடு/புல்வெளி |
| பாலை | வறட்சியான பகுதி |
| மருதம் | வயல் சார்ந்த இடங்கள் |
| நெய்தல் | கடலோரப்பகுதி |

கேரளாவின் முல்லசேரி, மருதூர், பாலக்காடு போன்ற இடப்பெயர்கள் கேட்டிருப்பீர்களல்லவா? இப்பெயர்கள் திணைகளோடு தொடர்புடைய பெயர்களாகும். திணைகளின் பட்டியலைப் பார்த்து இப்பெயர்கள் எந்தத் திணைகளோடு தொடர்புடையவை எனக் கண்டுபிடிக்கலாமல்லவா?

திணைகளோடு தொடர்புடைய இடப்பெயர்களைத் தேடிக் கண்டுபிடித்து அட்டவணை தயாரிக்கவும்.

குறிஞ்சி நிலத்தில் அன்று நல்லமிளகு ஏராளமாகப் பயிர் செய்யப்பட்டிருந்தது. நல்லமிளகிற்காக வெளிநாட்டவர்கள் தென்னிந்தியாவின் கடலோர நகரங்களை வந்தடைந்தனர். இக்காலத்தின் சிறப்புகள் அன்றைய முக்கியமான இலக்கியப் படைப்புகளில் கூறப்பட்டுள்ளன.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பாடலைக் கவனியுங்கள். சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறிலிருந்து எடுக்கப்பட்ட பாடல் தான் இது.

மீன் நொடுத்து நெல்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து!
மனைக் கவைஇய கறிமூடையால்
கலிச் சும்மைய கரை கலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசும்
கழித் தொணியான் கரைசேர்க்குந்து;
மலைத்தாரமும் கடல்தாரமும்
தலைப்பெய்து, வருநர்க்குஈயும்
புனலங்கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்கு கடல் முழவின் முசிறியன்ன

இப்பாடலிலிருந்து என்னென்ன தகவல்கள் கிடைக்கின்றன?

- திணைகளின் உற்பத்திப் பொருட்கள் கைமாற்றம் செய்யப் பட்டிருந்தது.
- நல்லமிளகு வியாபாரம் சிறப்பாக நடைபெற்றது
- அதற்கு விலையாக நிறைய தங்கம் கிடைத்தது
- கடல் வழி வந்தவர்களுமாக வியாபாரத் தொடர்பு இருந்தது
- நல்லமிளகு தவிர பிற விளைபொருட்களுக்காகவும் தேவையானவர்கள் வந்திருந்தனர்

மேலும் தகவல்களைக் கண்டுபிடித்துச் சேர்ப்பீர்களல்லவா?



வெண்கலக் காலத்திலிருந்து இரும்புக் காலத்திற்கு வந்தபோது மனித வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை? - கலந்துரையாடவும்.



## தொகுப்பு

- கி.மு. 1500 முதல் கி.மு. 600 வரையிலான காலம் வேதகாலம் என அறியப்படுகிறது.
- வேதகாலம் ரிக்வேதகாலம், பிற்கால வேதகாலம் எனப் பிரிக்கப்படுகிறது.
- இக்காலகட்ட மக்களின் வாழ்வியல் முறைகளுக்கிடையே நிறைய வேறுபாடுகள் காணப்பட்டன.
- பிற்கால வேதகாலத்தில் தான் இந்தியாவில் இரும்பின் பயன்பாடு பரவலாகியது. அதனால் இக்காலம் இந்தியாவின் இரும்புகாலம் என அறியப்படுகிறது.
- பழங்காலத் தமிழகத்தின் இரும்புக்காலம் பெருங்கற்கால நாகரிகக் காலம் என அழைக்கப்படுகிறது.
- வேறுபாடான புவியியல் தனித்தன்மைகள் நிலைபெற்றிருந்த திணைகள் பழங்காலத் தமிழகத்தின் முக்கியமான சிறப்பாக இருந்தது.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- வேதகாலத்தைப் புரிந்து கொள்கின்றனர்.
- ரிக் வேதகாலத்தின் மக்கள் வாழ்க்கையைப் பற்றிப் புரிந்து கொண்டு அதை ஹரப்பாவின் மக்கள் வாழ்க்கையோடு ஒப்பிடுகின்றனர்.
- பிற்கால வேதகால மக்கள் வாழ்க்கையைப் புரிந்துகொண்டு அதை ரிக்வேத கால வாழ்க்கையோடு ஒப்பிடுகின்றனர்.
- பழங்காலத் தமிழகத்தில் இரும்புக் காலமான பெருங்கற்கால நாகரிகக் காலத்தைப் புரிந்துகொள்கின்றனர்.
- திணைகளின் தனித்தன்மைகளைப் புரிந்துகொள்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- ரிக் வேத காலம் மற்றும் பிற்கால வேதகால மக்கள் வாழ்க்கையை ஒப்பிடுதல்
- சங்ககால இலக்கியங்களின் பட்டியல் தயாரித்தல்
- கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் **அ** பிரிவுக்குப் பொருத்தமாக **ஆ** பிரிவை வரிசைப்படுத்தவும்.

| அ | ஆ |
|---|---|
| குறிஞ்சி | வறட்சியான பகுதி |
| முல்லை | வயல் சார்ந்த பகுதி |
| நெய்தல் | மலை சார்ந்த பகுதி |
| பாலை | புல்வெளி |
| மருதம் | கடலோரப் பகுதி |

- இரும்பைக் கண்டுபிடித்துக் கருவிகளை உருவாக்கி பயன்படுத்தியது மனித வரலாற்றின் முக்கியமான காலமாக இருந்தது. நிறுவுக.

## தொடர் செயல்பாடுகள்

- பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் படங்களைச் சேகரித்துக் குறிப்புகள் அடங்கிய ஒரு படத்தொகுப்பு தயாரிக்கவும்.




# 8 அகிம்சை அறிவு அதிகாரம்

மரங்கள், செடி, கொடிகளைத் தீக்கிரையாக்கி
பொன் கதிருக்கு உரமாக்கி
கடின இரும்பை உருக்கிப் பல
கருவிகள் செய்து பல தொழிலுக்கு அளித்து
அறிவின் திரிகளைக் கொளுத்திக் கலைகளுக்கு
ஆவேசமாக உணர்வு கொடுத்து
துன்பத்தில் உழலும் மனித ஆத்மா
உயர்ந்து பறக்க, சிறகை விரித்து. – **வைலோப்பிள்ளி**

மேலே கொடுக்கப்பட்டுள்ள கவிதைப் பகுதியைக் கவனிக்கவும்.

இந்தியாவில் மனித வாழ்க்கையின் முன்னேற்றம் எவ்வாறு அமைந்திருந்தது என்று இக்கவிதையை அடிப்படையாகக் கொண்டு கண்டு பிடிக்கவும்.

கங்கைச்சமவெளியை நோக்கி ஆரியர்கள் முன்னேறியதைப் பற்றி நாம் விவாதித்தோமல்லவா? ஆரியர்களுடைய வருகையைத் தொடர்ந்து கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் கங்கைச்சமவெளியில் வேளாண்மைப் பகுதிகள் தோன்றின. வியாபார மையங்களும் பட்டணங்களும் அடங்கிய இப்பகுதிகள் பின்னர் ஜனபதங்கள்என்று அறியப் பட்டன. இத்தகைய ஜனபதங்கள் கோதாவரி நதிக்கரை வரையிலும் பரந்துகிடந்தன. அவற்றுள் 16 பகுதிகள் சக்தியான வளர்ச்சியைப் பெற்றன. அதனை மகா ஜனபதங்கள் என அழைத்தனர். அவற்றுள் முக்கியமானது மகதம்.




இங்குத் தரப்பட்டுள்ள நிலப்படத்தை உற்றுநோக்கி மகத நாட்டினை அடையாளம் காண்க.

**மகா ஜனபதங்கள்**

மகதம், அங்கம், வஜ்ஜி, மல்லா, காசி, வல்சம், கோசலம், சேதி, பாஞ்சாலம், அஸ்மகம், அவந்தி, குருஸேனை, குரு, மால்சியம், காந்தாரம், கம்போஜம் ஆகியன 16 மகாஜன பதங்களாகும்.

மிகப்பெரும் அளவில் இரும்புத்தாது சேமிப்பு உள்ள பிரதேசமாகும் மகதம். மகதத்தினுடைய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது இரும்பு ஆயுதங்கள் மற்றும் கருவிகளுடைய பயன்பாடாக இருந்தது. கங்கை நதிக் கரையிலுள்ள அடர்ந்த காடுகளை வெட்டி ஒழுங்குபடுத்த இரும்பினாலான கோடரி உதவியாக இருந்தது. இரும்புக் கலப்பையைப் பயன்படுத்தி நிலத்தை உழுது பண்படுத்த இயன்றது. இதன் பலனாக வேளாண் உற்பத்தி அதிக மானது. தொடர்ந்து வியாபாரத்துறையில் உருவான முன்னேற்றம் நகரங் களின் வளர்ச்சிக்குக் காரணமானது. வேளாண்மைத் துறையிலும் வியாபா ரத்துறையிலும் உண்டான முன்னேற்றத்தின் வழியாக மகதம் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைந்தது. பெரிய ஒரு படையை உருவாக் குவதற்கும் சுற்றியுள்ள பகுதியைக் கீழடக்குவதற்கும் மகதத்தின் செல்வச் செழிப்பு அரசர்களுக்கு உதவின. வேறுபட்ட காலங்களில் மகதத்தின் ஆட் சியாளர்கள் பிற மகாஜனபதங்களை மகதத்தோடு இணைத்தனர். இவ்வாறு மகதம் விரிவான ஒரு நாடாக மாறியது.


ஒரு பெரும் சக்தியாக மகதம் மாறுவதற்கு உதவிய காரணிகள் எவையெல்லாம்?

- இரும்புத்தாதுக்களின் சேமிப்பு
-
-
-

## அகிம்சை

இது மகதத்தின் ஆட்சி அதிகாரியான பிம்பிசாரனுடைய அறிவிப்பாகும். இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கான காரணம் என்ன?

ஒரு நாடு என்ற நிலையிலுள்ள மகதத்தின் வளர்ச்சியில் வேளாண்மை வகித்த பங்கை நாம் புரிந்துகொண்டோம் அல்லவா? கால்நடைகள் தான் வேளாண்மைத் துறையின் அடிப்படையாக இருந்தது. நிலத்தை உழுவதற்கும் உரத்திற்கும் கால்நடைகள் தேவைப்படுகின்றன. ஆனால் யாகங்களின் பெயரில் பெரும் அளவிலான கால்நடைகள் கொல்லப் பட்டன. இது வேளாண்மையை மிகவும் பாதித்தது. இந்தச் சூழலில்தான் பிம்பிசாரன் இத்தகைய ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.



இதே காலகட்டத்தில் சமூகத்தில் நிலவியிருந்த சமத்துவமின்மைக்கு எதிராகச் சமண மதமும் புத்தமதமும் தோன்றின. வர்த்தமான மகாவீரர் பரப்பிய சமண மதமும் புத்தர் தோற்றுவித்த புத்தமதமும் அகிம்சைக்கு முக்கியத்துவம் வழங்கின. மிகுதியான மிருகபலிதான் அகிம்சையைப் பரப்புவதற்கு மகாவீ ரரையும் புத்தரையும் தூண்டியது.


மகாவீரர் சிலை


புத்தர் சிலை

சாதாரண மக்களின் மொழியில் அவர்கள் தங்கள் கருத்துகளைப் பரப்பினர். மகாவீரர் பயன்படுத்திய மொழி பிராகிருதமாகும். புத்தர் பாலி மொழியைப் பயன்படுத்தினார். அரச குடும்பத்தில் வளர்ந்த புத்தரும் மகாவீரரும் எல்லா சுகபோகங்களையும் பெற்றிருந்தனர். ஆனால் சாதரண மக்களின் கஷ்டங் கள் அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தின. மக்களுடைய துன்பத்தை ஒழிப் பதற்கான வழிகளை அவர்கள் தேடினர்.



| சமணமதக் கொள்கைகள் | புத்தமதக் கொள்கைகள் |
|---|---|
| • சரியான ஞானம்<br>• சரியான நம்பிக்கை<br>• சரியான செயல் | • இவ்வுலக வாழ்க்கை துக்கத்தைத் தருவ தாகும்<br>• ஆசையே துன்பத்திற்குக் காரணம்<br>• ஆசையை ஒழித்தால் அழிவை ஒழிக்கலாம்<br>• அஷ்டாங்க மார்க்கத்தைக் கடைபிடித்தால் அதன் வாயிலாக ஆசைகளைத் தவிர்க்கலாம் |



சமண - புத்தமதங்கள் அகிம்சைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்ன?

## அதிகாரம் வளர்கிறது



தேசிய முத்திரை

இந்தப் படம் உங்களுக்குத் தெரிந்தது தானே? இதை நீங்கள் எங்குப் பார்த்திருக்கிறீர்கள்?

இது நமது தேசிய முத்திரையாகும். அசோகச் சக்கரவர்த்தி சாரநாத்தில் நிறுவிய தூணில் இருந்து எடுக்கப்பட்டது. இதில் உள்ள அசோக சக்கரம் தான் நமது தேசியக் கொடியின் நடுவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மகதத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த மௌரிய அரச வம்சத்தின் முக்கியமான அரசர் அசோகர். மௌரிய அரச வம்சத்தைச் சந்திரகுப்த மௌரியர் தோற்றுவித்தார்.

### அர்த்த சாஸ்திரம்


சாணக்கியன்

மௌரியப் பேரரசின் தோற்றத்திற்குக் காரணமான சந்திரகுப்த மௌரியரின் ஆட்சி ஆலோசகராக இருந்தவர் சாணக்கியன். இவர் கௌடில்யன் என்ற பெயரிலும் அழைக்கப்படுபவர். சாணக்கியனின் புகழ்பெற்ற நூல் அர்த்த சாஸ்திரமாகும். இந்நூல் சக்தியும் திறமையும் வாய்ந்த ஓர் ஆட்சிக்குழு எவ்வாறு இருக்க வேண்டும் என்னும் கருத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது.

## ராஜாவின் தர்மம்


நாட்டின் பல பிரிவைச் சார்ந்த மக்களிடையே ஒற்றுமை இருந்தால் தான் நாடு சமாதானமாக இருக்கும். இதற்காக அசோகர் கைக்கொண்ட முறையே தம்மம் (தர்மம்). மக்களிடையே ஒற்றுமையையும் பொறுமையையும் வளர்த்து நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்த உருவாக்கிய கருத்துகளே தர்மம்.

அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- பெற்றோர்களை மதித்தல்
- குருக்களை ஆதரித்தல்
- விலங்குகளைப் பலியிடுதலை ஒழித்தல்
- எல்லா மதத்தினரிடமும் பொறுமையைக் கையாளுதல்
- பிற உயிர்களிடம் கருணை காட்டுதல்

அசோக சக்கரவர்த்தியின் தர்மம் என்ற கொள்கையும் தற்கால நிலைமையும் குறித்துக் கலந்துரையாடல் செய்க.

அசோக சக்கரவர்த்தி தன்னுடைய தீர்மானங்களையும் பரிந்துரைகளையும் கற்களில் கொத்தி வைத்து மக்களுக்கு அறிவித்தார். இத்தகைய கல்வெட்டுக்கள் முக்கியமான சாலையோரங்களிலும் நகர மையங்களிலும் நிறுவப்பட்டன.


அசோகரின் கல்வெட்டு எழுத்துக்கள்

புத்தமதம் தான் தருமத்தைப் பரப்புவதற்கு அசோகருக்குத் தூண்டுதலாக இருந்தது. நாட்டின் எல்லையை விரிவுபடுத்த அசோகர் பல போர்களை நடத்தினார். அவற்றுள் முக்கியமானது கலிங்கப்போர் ஆகும். இதில் கலிங்கம் தோல்வியுற்றது. பெரும்பாலோரின் மரணத்திற்கும் துயரங்களுக்கும் காரணமான இக் கலிங்கப் போருக்குப் பின்னரே அசோகர் புத்தமதத்தைத் தழுவினார். புத்தமதத்தை உலகின் பல பகுதிகளில் பரப்புவதற்கு அசோகர் முக்கிய பங்கு வகித்தார்.

## இனி ஒரு போர் வேண்டாம்


கலிங்கப் போர் - ஓவியரின் கற்பனையில்

சக்கரவர்த்தியான பிறகு அசோகர் போர்கள் வழியாக நாட்டை விரிவுபடுத்திக்கொண்டிருந்தார். கலிங்க நாட்டு அரசனிடம், தன் ஆட்சிக்குக் கீழ்ப் பணியும்படி தூது அனுப்பினார். தன்மானமுள்ள கலிங்க அரசர் கீழ்ப்பணிய மறுத்துவிட்டார். கி.மு. 261ஆம் ஆண்டில் அசோகர் படைகளையெல்லாம் திரட்டிக்கொண்டு கலிங்கத்தைக் கீழடக்கப் புறப்பட்டார். சுதந்திரதாகமுடைய கலிங்க மக்கள் ஒற்றுமை உணர்வோடு அசோகரது படையை எதிர்த்தனர். அசோகருடைய எதிர்பார்ப்பிற்கு மாறாக கலிங்கநாடு பலமுறை வெற்றியை நோக்கி நகர்ந்தது. இறுதியில் வெற்றி அசோகருக்கு கிடைத்தது.

போர்க்களம் இருபிரிவினர்களின் சடலங்களால் நிறைந்திருந்தது. வட்டமிட்டுப் பறக்கும் கழுகுகள்... கைகால்களை இழந்து வலியால் துன்புறுபவர்கள். உற்றோர்களை இழந்த அனாதைக் குழந்தைகளின் அழுகை, கைம்பெண்களின் கண்ணீர் ஆறு...

போர்க்களக் காட்சிகள் அசோகரது மனதைப் புண்படுத்தின. இந்த நிலையிலான வெற்றி அர்த்தமற்றது என்பதைப் புரிந்துகொண்டார். சில நாட்களிலேயே அவர் புத்தமதத்தில் சேர்ந்துகொண்டார். புத்தமதக் கொள்கையின் அடிப்படையிலேயே தன் ஆட்சியைத் தொடர்ந்தார்.

கலிங்கப்போர் அசோகரை எவ்வாறு பாதித்தது என்பதைக் குறுநாடகத்தின் வாயிலாக நடித்துக் காட்டவும்.

## சமூகம், செல்வம், கலை

மௌரியர்களின் கால கட்டத்தில் சமூக, பொருளாதார வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்று பார்ப்போம்

- நான்கு வருணங்களில் உட்பட்ட சமூகப் பிரிவுகள் இருந்தன.
- வேளாண்மை செயல்பாடுகளைச் சூத்திரர்களைக் கொண்டு செய்வித்தனர்
- சமணமதமும் புத்தமதமும் கூடுதல் பிரச்சாரத்தில் இருந்தன.
- வேளாண்மையும் வியாபாரமும் மௌரியர் காலத்தில் வளர்ச்சி பெற்றன.
- வேளாண்மையின் வளர்ச்சிக்காக மன்னர்கள் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினர்
- தையல், நெசவு போன்ற கைத்தொழில்கள் நிலவி இருந்தன.
- நாணயங்கள் வழக்கத்தில் இருந்தன
- வியாபார வசதிக்காகப் பல பாதைகளை உருவாக்கினர்

அசோகர் சாஞ்சியில் ஸ்தாபித்த ஸ்தூபமே படத்தில் காட்டப்பட் டுள்ளது. இதுபோன்ற பல ஸ்தூபங் கள் மௌரியர் காலகட்டத்தில் கட்டப்பட்டன. இவை தவிர அனேக அரண்மனைகளும் சாரநாதில் உள் ளது போன்ற தூண்களும் எழுப்பப் பட்டன. இந்தக் கட்டிடங்கள் எல்லாம் மௌரியர் காலகட்டத்தின் வாஸ்துகலையிலும் சிற்பக் கலை யிலும் உருவான வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.



சாஞ்சியில் உள்ள ஸ்தூபம்

மௌரியர் கால மக்கள் வாழ்க்கையைப் பிற்கால வேதகால மக்கள் வாழ்க்கையுடன் ஒப்பீடு செய்க

## காலம் மாறுகிறது

மௌரியர் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளியில் உருவான மற்றொரு அரச வம்சம் குப்தர்களுடையதாகும். முதலாம் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர் ஆகியோர் இந்த அரசவம்சத்தின் குறிப்பிடத்தக்க ஆட்சியாளர்களாக இருந்தனர். குப்த காலகட்டத்தின் இறுதிக் காலத்தில் தொலைவிலுள்ள நாடுகளோடு இருந்த வியாபாரத்தில் குறைவு ஏற்பட்டது. அதிக அளவிலான மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர். அக்காலத்தில் அரசர்கள், அந்தணர்

களுக்கும் ஆலயங்களுக்கும் பெருமளவில் நிலங்களைத் தானமாக வழங்கினர். அந்தணர்கள் வேளாளர்களால் இவ்விடங்களில் வேளாண்மை செய்வித்தனர். சமூக சமுத்துவமின்மை பெருகியது. புத்தமதம் சமண மதம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறைந்தது.

## அறிவின் வளர்ச்சி

குப்தர்களுடைய காலத்தில் ஏராளமான வடமொழி இலக்கியங்கள் எழுதப்பட்டன. அக்காலப் புலவர்களுள் முக்கியமானவர் காளிதாசன். அபிக்ஞான சாகுந்தலம், மேக சந்தேசம், குமாரசம்பவம் ஆகியன அவரு டைய முக்கியமான படைப்புகளாகும்.



மௌரிய காலகட்டம் மற்றும் குப்த காலகட்டத்தின் சமூகப் பொருளாதார வாழ்க்கையை ஒப்பீடு செய்யவும்.

படத்தில் காட்டப்பட்டுள்ள இரும்புத் தூணைக் கவனித்தீர்கள் அல்லவா? இன்று டில்லியின் அருகே உள்ள மெக்ரௌளியில் உள்ள இந்தத் தூண் கட்டப்பட்டது இரண்டாம் சந்திரகுப்தரின் காலகட்டத் திலாகும்.



**நவரத்தினங்கள்**

இரண்டாம் சந்திரகுப்தரின் அரண்மனையில் வாழ்ந்திருந்த ஒன்பது பண்டிதர்கள் நவரத்தினங்கள் என்ற பெயரில் அறியப்பட்டார்கள். காளிதாசன், கடகர்ப்பரன், சபணகன், வரருசி, வராகமிகிரன், வேதாளப் பட்டன், தன்வந்தரி, அமரசிம்கன், சங்கு என்பவர்களே அப்பண்டிதர்கள்.



மெக்ரௌளி இரும்புத் தூண்

கொடிய வெப்பமும் மழையும் அடர்ந்த பனியும் பட்டால் கூட இன்றும் துரும்பு பிடிக்காமல் இத்தூண் நிற்கின்றது என்றால் அற்புதமாகத் தோன்றுகிறதல்லவா? குப்தர்கால கட்டத்தில் உருக்கைப் பயன் படுத்தியதின் சிறப்பை வெளிக்காட்டுவதாக இந்த இரும்புத்தூண் உள்ளது.

குப்தர் காலத்தில் அறிவியல் துறையில் சிறந்த பங்காற்றியவர்களில் சிலர் வராகமிகிரன், பிரம்ம குப்தன், பாஸ்கராச்சாரியர், ஆரியபட்டர் போன்றவர்கள் ஆவர். இவர்களுள் வராகமிகிரன், பிரம்ம குப்தன் ஆகியோர் ஜோதிடக் கலையிலும், பாஸ்கராச்சாரியர் கணிதத் துறையிலும், ஆரியபட்டர் இவ்விரு கலைகளிலும் சிறந்த கொடைகளை வழங்கினர்.

குப்தர் காலத்தில் வாழ்ந்திருந்த குறிப்பிடத்தக்க சில நபர்களின் பெயர்கள்

பட்டியலில் தரப்பட்டுள்ளன. அவர்கள் எந்தெந்தத் துறைகளில் சிறந்தவர்கள் என்று எழுதுக.



| நபர்கள் | துறைகள் |
|---|---|
| ஆரியபட்டர் | |
| காளிதாசர் | |
| வராகமிகிரன் | |
| பாஸ்கராச்சாரியர் | |
| பிரம்மகுப்தன் | |

பழங்கால இந்தியாவின் புகழ்பெற்ற கல்வி மையமாக இருந்த நளந்தா பல்கலைக்கழகத்தின் எஞ்சிய பகுதிதான் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இது குப்தர் காலத்தில்தான் நிறுவப்பட்டது. ஆசியாவின் பல பகுதிகளில் இருந்து இங்கு மாணவர்கள் வந்திருந்தனர். பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் அங்கு இருந்தனர்.



நளந்தா பல்கலைக்கழகத்தின் எஞ்சிய பகுதி

இப்பாடப் பகுதியில் நீங்கள் தெரிந்து கொண்ட சில கட்டடங்களின் படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் எந்தப் பகுதியின் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன? எழுதிப்பாருங்கள்.

| நினைவுச்சின்னங்கள் | மண்டலங்கள் |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |



அறிவியல், கலை, இலக்கியம், கல்வி போன்ற துறைகளில் பழங்கால இந்தியாவில் குப்தர்களின் காலம் மிகச் சிறப்பானது. விளக்குக.

மகதத்தின் வளர்ச்சி முதல் குப்தர்காலம் வரையிலான சமூக மாற்றங்களை நாம் விவாதித்தோம். அவற்றுள் முக்கியமானவை எவையென்று பார்ப்போம்.

- வேளாண்மை வளர்ச்சி பெற்றதால் வேளாண் உற்பத்தி அதிகமானது.
- வேளாண்மையும் அத்துடன் தொடர்பு கொண்ட தொழில்களும் பல புதிய அறிவை ஏற்படுத்தின.
- சமூக சமத்துவமின்மைகளுக்கு எதிராக உயர்ந்த கருத்துக்கள், சமூகத்திலும் அரசாட்சியிலும் தாக்கம் செலுத்தின.
- அறிவியல், கலை, இலக்கியம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆட்சி அதிகாரிகள் ஊக்குவித்தனர்.

JT 559-4/ Soc. Science (T)-5 (Vol-2)

## தொகுப்பு

- நிலையான வாழ்வும் வேளாண்மையின் வளர்ச்சியும் மகாஜன பதங்களுடைய தோற்றத்திற்கு வழி வகுத்தன.
- கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் சமணமதம், புத்தமதம் ஆகியன தோன்றின.
- 16 மகாஜனபதங்களில் முக்கியமானதாக மாறிய மகதம் தான் மௌரியர் ஆட்சியின் மையமாக வளர்ந்தது.
- குப்தர்களின் காலகட்டத்தில் இலக்கியம், கலை, அறிவியல், கல்வி போன்ற துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.
- நளந்தா பல்கலைக் கழகம் பழங்கால இந்தியாவின் முக்கியமான கல்வி மையமாக இருந்தது.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- பழங்கால இந்தியாவில் நிலைபெற்ற மகாஜனபதங்களைப் புரிந்து கொள்கின்றனர்.
- மகதத்தின் உயர்வுக்குக் காரணமான விஷயங்களைப் புரிந்துகொள்கின்றனர்.
- புத்தமதமும் சமணமதமும் உருவாவதற்கு உதவிய சூழலைப் புரிந்துகொள்கின்றனர்.
- மௌரியர்களின் ஆட்சிக்காலத்தைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- குப்தர் காலகட்டத்தில் கலை, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளில் உண்டான முன்னேற்றத்தை மதிப்பிடுகின்றனர்.
- குப்தர் காலகட்டத்தின் சமூக, பொருளாதார வாழ்க்கையை மௌரியர் காலகட்டத்துடன் ஒப்பீடு செய்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- புத்தமதம் மற்றும் சமணமதத்தின் தோற்றம் காலகட்டத்தின் தேவை என்று கூறமுடியுமா? விளக்குக.
- மகதத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்த காரணங்களைத் தெளிவுபடுத்துக.
- ஜனபதங்களுடைய தோற்றத்திற்கு வேளாண் துறையின் பங்கை விளக்கவும்.

- அசோகருடைய தர்மம் என்றால் என்ன? விளக்குக.
- குப்தர்களுடைய காலத்தில் அறிவியல், இலக்கியம் போன்ற துறைகளில் உண்டான முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்துக.



## தொடர் செயல்பாடுகள்

- தேசிய சின்னத்தில் அடையாளப்படுத்திய பொருட்கள் எவை என்று கண்டுபிடித்துப் பட்டியலிடுக.
- பழங்கால இந்தியாவின் இலக்கிய ஆசிரியர்களையும் அவர்களுடைய படைப்புகளையும் பட்டியலிடுக.
- ஜாதகக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், விக்கிரமாதித்திய கதைகள் போன்றவற்றைச் சேகரித்து வாசிக்கவும்.







# 9

# மக்கள் மக்களுக்காக




நீங்கள் கிராம சபையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஒரு கிராம சபைக் கூட்டத்தின் படம்தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

உங்களுடைய பகுதியில் கிராம சபை கூடுவதுண்டா? அதில் யார் யார் பங்கெடுக்கின்றனர் எனவும், எந்தெந்த விவாதங்கள் நடகின்றன எனவும் கூற முயற்சிக்கவும்.

வார்டு அளவிலான வளர்ச்சிச் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் இடமே கிராம சபை. நகரங்களில் இதை வார்டு சபை என அழைப்பார்கள். ஒரு வார்டில் அனைத்து வாக்காளர்களுக்கும் கிராம சபையில் / வார்டு சபையில் பங்கெடுக்க லாம். விவாதங்களில் பங்கெடுத்துக் கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பு அளிக் கப்படுகிறது. வார்டில் நடைமுறைப்படுத்த வேண்டிய முன்னேற்றச் செயல்பாடு கள் குறித்து மக்கள் கிராமசபையில் கலந்துரையாடித் தீர்மானங்கள் எடுக்கிறார் கள். இத்தகையச் செயல்பாடுகளுக்குத் தலைமை தாங்குவது அந்த வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி ஆவார். இம்மக்கள் பிரதிநிதிகள் கிராமங் களில் வார்டு உறுப்பினர் எனவும் நகரங்களில் கவுன்சிலர் எனவும் அழைக்கப்ப டுகிறார். இவ்வாறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதை வேறு எங்கெல்லாம் உங்களால் பார்க்க முடியும்?

- வகுப்பு / பள்ளித்தலைவர்
- கூட்டுறவுச் சங்கம்
- மன்றம் / நூலகம்
- பிளாக் பஞ்சாயத்து
- மாவட்டப் பஞ்சாயத்து
- மாநிலச் சட்டமன்றம்
- பாராளுமன்றம்
- 

கிராமசபையில் மக்களுக்கு நேரடியாகப் பங்குபெறவும் தீர்மானங்கள் எடுக்கவும் இயலுகிறது. ஆனால் மாநில அளவிலும் தேசிய அளவிலும் ஒன்றிணைந்த தீர்மானங்களை எடுப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாவர்.

மக்களாட்சி மக்களின் விருப்பப்படி அமைய வேண்டும்.

**– மகாத்மா காந்தி**






மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே மக்களாட்சி

**– ஆபிரகாம் லிங்கன்**

உலக ஆதரவைப் பெறும் ஒரே ஆட்சிமுறை மக்களாட்சியாகும்

**– அமர்த்யா சென்**



மக்களாட்சியின் சில தனித்தன் மைகளையும் மக்களாட்சியைப் பற்றிய மேதைகளின் கருத்து களையும் வாசித்தீர்களல்லவா? மக்களாட்சி என்றால் என்ன என் பதைப் பார்ப்போம். மக்கள் நேரடி யாகவோ மக்களால் தேர்ந்தெ டுக்கப்பட்ட பிரதிநிதிகளோ மக்க ளுக்காக ஆட்சி நடத்தும் முறையே மக்களாட்சி என அழைக்கப்படு கிறது.

**மக்களாட்சி**

மக்களாட்சி என்னும் பொருள்படும் டெமோக்ரஸி என்ற ஆங்கில வார்த்தை டோமோக்றேற்றியா என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து தோன்றியதாகும். இச் சொல் மக்கள் என்று பொருள்படும் டெமோஸ் (demos) சக்தி அல்லது அதி காரம் என்று பொருள்படும் கிறாற்றாஸ் (kratos) போன்ற கிரேக்க வார்த்தைகள் சேர்ந்து உருவானதாகும்.

## நேரடி மக்களாட்சியும் மறைமுக மக்களாட்சியும்


மக்கள் நேரடியாக முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் நிலையே நேரடி மக்களாட்சியாகும். மாநிலச் சட்டமன்றம், பாராளுமன்றம் போன்ற இடங்களில் மக்கள் நேரடியாகத் தீர்மானங்கள் எடுப்பதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளே இங்கு மக்களுக்காகத் தீர்மானங்களை எடுக்கிறார்கள். இவ்வாறான பிரதி நிதித்துவ மக்களாட்சியை மறைமுக மக்களாட்சி என்கிறோம்.

## மக்களாட்சியும் வாக்கெடுப்பும்

வட்டார அளவிலிருந்து பாராளுமன்ற அளவு வரை தங்களை ஆட்சி செய்யும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு உரியதாகும். வயது வந் தோர் அனைவருகக்கும் வாக்குரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடக்கிறது. 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்களிக்க முடியும். இவ்வாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சட்டமன்றத்திற்கும் லோக்சபாவுக்கும் உள்ள பிரதிநிதிகளை மக்கள் வாக்கெடுப்பின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கின்றனர். மக்களாட்சியின் அடிப்படைத் தத்துவங்களில் தேர்தலும் ஒன்றாகும்.

மக்களாட்சியோடு தொடர்புபடுத்திக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடை அளிக்கலாம் அல்லவா?

- உங்கள் வீட்டில் யார் யார் வாக்களிக்கிறார்கள்?
- உங்களது சட்டமன்றத் தொகுதி எது?
- உங்களது சட்டமன்றத் தொகுதி யின் மக்கள் பிரதிநிதி (M.L.A) யார்?
- உங்களது பாராளுமன்றத் தொகுதி எது?
- உங்களது பாராளுமன்றத் தொகுதி யின் மக்கள் பிரதிநிதி (MP) யார்?




## தேர்தல் நிலைகள்

பள்ளிக்கூடத்தில் மக்களாட்சி முறையிலான தேர்தலின் பகுதியாக உங்களுடைய வகுப்பிலும் தலைவரைத் தேர்ந்தெடுத்திருப்பீர்களல்லவா? அதுபோன்று நமது நாட்டின் தேர்தல் முறையிலும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய சில நிலைகள் உள்ளன. அந்நிலைகளைக் குறிக்கும் நழுவு படத்தைக் கவனியுங்கள்.

**தேர்தல் நிலைகள்**

தேர்தல் அறிக்கை வெளியிடப்படுதல்.
↓
வேட்புமனு தாக்கல் செய்தல்
↓
வேட்புமனுவை நுணுக்கமாகப் பரிசோதித்தல்
↓
வேட்புமனு திரும்பப் பெறுதல்
↓
வாக்கெடுப்பு
↓
வாக்கு எண்ணிக்கை, முடிவு வெளியிடுதல்

இவ்வாறு எல்லா நிலைகளையும் பின்பற்றித்தான் எல்லாத் தேர்தல்களும் நடக்கின்றன. மக்களாட்சியில் தேர்தல் மிக முக்கியமான ஒன்றாகும். தேர்தலைப் போலவே மக்களாட்சி வேறு சில சூழல்களையும் சார்ந்துள்ளது. அவை எவையெனப் பார்ப்போம்.

## மக்களாட்சியின் நிலைபேற்றிற்குத் தேவையான காரணிகள்

- **சட்டம்**

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம். எல்லோரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். யாரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் இல்லை. சட்டத்தின் முக்கியத்துவத்தை ஒரு எளிய எடுத்துக்காட்டுடன் நாம் புரிந்து கொள்ளலாம்.

சாலையில் அலட்சியமாக வாகனம் ஓட்டினால் என்ன நடக்கும்? அதன் விளைவுகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.

வாகனங்களின் போக்குவரத்தைச் சுமுகமாகவும் பாதுகாப்பாகவும் செயல்படுத்துவதே போக்குவரத்துச் சட்டங்களின் லட்சியமாகும். இவ்வாறான பல்வேறு சட்டங்களைக் கண்டறிந்து அவை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றத்திற்கு எவ்வாறு துணைபுரிகின்றன என்பதை மதிப்பிடவும்.

- **உரிமைகள்**

தனி மனிதன் மற்றும் நாட்டின் உடைய முன்னேற்றத்திற்காகவும் நாடு வழங்கி உள்ள சூழல்களே உரிமைகளாகும். பல்வேறு உரிமைகள் மக்களுக்குக் கிடைப்பதற்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்திய சட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியலில் 'A' கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தின் வாயிலாகக் கிடைக்கின்ற பல உரிமைகளைக் கண்டறிந்து 'B' கட்டத்தை நிரப்ப முயற்சிக்கவும்.

| 'A'<br>பல்வேறு சட்டங்கள் | 'B'<br>கிடைக்கின்ற உரிமைகள் |
|---|---|
| • கல்வி உரிமைச் சட்டம் | • |
| • மோட்டார் வாகனச் சட்டம் | • |
| • தகவல் அறியும் உரிமைச் சட்டம் | • |
| • முதியோர் பராமரிப்புச் சட்டம் | • |

அட்டவணையில் கூறப்பட்ட பல்வேறு சட்டங்கள் வாயிலாக ஒரு ஜனநாயக நாட்டின் மக்களுக்குப் பல உரிமைகள் கிடைக்கின்றன எனப் புரிந்தது அல்லவா?

இவ்வாறான உரிமைகள் இல்லையெனில் என்ன நடக்கும் எனவும், மக்க ளாட்சியை அது எவ்வாறு பாதிக்கும் என்பதையும் வகுப்பில் கலந்துரை யாடல் நடத்தலாம்.

- **சமூக - பொருளாதார நீதி**

அனைத்து மக்களும் பங்குபெற வாய்ப்பளிக்கும் ஆட்சிமுறையே மக்களாட்சி ஆகும். பங்குபெறுவோர் அனைவரும் சமம் ஆகும் பொழுது மக்களாட்சி அர்த்தம் உள்ளதாகிறது. சமூகம் மற்றும் பொருளாதார சமத்துவமின்மையைக் குறைத்து அனைவருக்கும் சமஉரிமை வழங்க வேண்டும் என்பதே சமூக பொருளாதார நீதி என்ற கருத்தின் அடிப்படையாகும்.



சமூக- பொருளாதார நீதிக்குப் புறம்பான சில கருத்துகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை எவ்வாறு மக்களாட்சியைப் பாதிக்கும் என்பதைப் பகுப்பாய்வு செய்க.

- அடிமைத்தனம்
- பெண் பாகுபாடு
- வேலையின்மை
- வறுமை

- **ஊடகங்கள்**



கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கவனித்தீர்கள் அல்லவா? ஊடகங்கள் என்றால் என்ன என்பதைப் பட்டியல் படுத்தவும். உங்களுக்குத் தெரிந்த பல்வேறு செய்தித்தாள்களையும் தொலைக்காட்சி சானல்களையும் கண்டறிக. சமூக நிகழ்வுகளை மக்களுக்குத் தெரியப்படுத்தத் துணைபுரியும் ஒரு முக்கிய காரணியே ஊடகமாகும். சுதந்திரமும் நடுநிலையானதுமான ஊடகங்கள் மக்களாட்சியின் அடிப்படையாகும். மக்களின் விருப்பங்களைப் பரஸ்பரம் அறிவதற்கும் பொதுவான தேவைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அரசின் தீர்மானங்களை மக்கள் அறிந்து கொள்வது ஊடகங்கள் வாயிலாகும். செய்தித்தாள்களில் இருந்து இத்தகைய செய்திகளைச் சேகரித்து வகுப்பறையில் வெளியிடுவீர்கள் அல்லவா?

ஊடகங்கள் இல்லையெனில் மக்களாட்சிக்கு என்ன நேரிடும் என்பதைக் கற்பனை செய்து ஒரு குறிப்பு தயாரிகக்கவும்.

- **எதிர்க்கட்சி**

மக்களாட்சியில் தேர்தலின் முக்கியத்துவத்தைப் பற்றி படித்தோம் அல்லவா. தேர்தல் வாயிலாக ஒரு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் உருவா கிறது. அரசின் செயல்பாடுகளின் குறைகளைச் சுட்டிக்காட்டி நல்ல முறையில் செயல்பட அரசாங்கத் தைத் தூண்டுவதே எதிர்க்கட்சியின் கடமையாகும். எதிர்க்கட்சியின் செயல்பாடுகளைப் பற்றிய செய்தித் துணுக்குகளைச் சேகரிப்பீர்கள் அல்லவா? மக்களாட்சியில் எதிர்க் கட்சியின் பங்கைக் குறித்து ஒரு விவாதம் நடத்துவீர்கள் அல்லவா?

இவ்வாறு தேர்தல், சட்டம், உரிமைகள் சமூகப் பொருளாதார நீதி, ஊடகங்கள், எதிர்க்கட்சி போன்ற காரணிகளே மக்களாட்சியை நிலைபெறச் செய்கின்றன.

## மக்களாட்சி ஒரு வாழ்க்கைமுறை

ஒரு வாழ்க்கை முறை என்ற நிலையில் மக்களாட்சி மனித மதிப்பீடுகளுக்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் அங்கீகாரம் வழங்குகிறது. பிறருடைய கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்தல் என்பது மக்களாட்சி வாழ்க்கை முறையின் பகுதியாகும். கருத்துகளை ஆதரிக்கவோ எதிர்க்கவோ தனி மனிதனுக்கு உரிமையுண்டு. ஒருங்கிணைந்த தீர்மானங்களை எடுக்க இயலும்போது மக்களாட்சி அர்த்தமுள்ளதாகிறது. வீடு, பள்ளிக்கூடம், சமூகம் போன்ற வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மக்களாட்சியை ஒரு வாழ்க்கை முறை எனப் புரிந்துகொண்டு செயல்பட இயலவேண்டும்.

தினசரி வாழ்க்கையில் மக்களாட்சிக் கொள்கையின் பல பழக்கங்களையும் நாம் கையாள்கிறோம் – அவை யாவை?

- பிறரது கருத்துகளை அங்கீகரித்தல்
- எனது வாய்ப்புக்காக காத்திருத்தல்.
- பிறரது சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல்.



உங்களுடைய நண்பன்/தோழி மக்களாட்சி ஆதரவாளரா? சோதனைப் பட்டியலைப் பரிசோதிக்கவும். பொருத்தமான பகுதியில் ✓அடையாளம் கொடுக்கவும்.

| சூழ்நிலை | ஆம் | இல்லை |
|---|---|---|
| சாலைவிதிகளைக் கடைபிடிப்பார் | | |
| வரிசையாக நின்று பள்ளிப் பேருந்தில் ஏற முயற்சிப்பார் | | |
| நூலகப் புத்தகத்தை உரிய காலத்தில் திருப்பிக் கொடுப்பார் | | |
| சில கருத்துகள் தவறானது எனத் தோன்றினால் ஏற்கமாட்டார் | | |
| பள்ளிச்சீருடை ஒழுங்காக அணிவார் | | |
| குப்பைகளைப் பொது இடங்களில் கொட்டமாட்டார் | | |

அதிகத் தகவல்கள் கண்டுபிடித்து சேர்க்கலாமல்லவா?

ஆம் என்ற பகுதியில் ✓என்ற அடையாளம் ஒரு நபர் ஜனநாயகவாதி என்பதைக் குறிப்பிடுகிறது. ஆம் என்ற பகுதியை அடையாளப்படுத்தியதின் எண்ணிக்கை அதிகரிக்கும்தோறும் ஒரு நபர் மக்களாட்சி வாழ்க்கை முறையோடு கூடுதல் நெருங்குகிறார் எனக் கூறலாம். சமூகம் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஒவ்வொருவரும் பிறருடைய மக்களாட்சி முறையிலான செயல்பாடுகளை மதிக்க வேண்டும். ஒரு நபரின் சுதந்திரமான செயல்பாடுகளைத் தடை செய்வதற்கு அடுத்தவர்களுக்கு உரிமையில்லை. மக்களாட்சி என்பது சட்டத்துறைக்கு உட்பட்டதாகும். சட்டங்களை மீறுதல் மக்களாட்சிக்கு எதிரானதாகும்.

ஒலி மாசடைதலைக் காட்டும் படத்தைக் கவனியுங்கள்.



இது போன்று மக்களாட்சிக் கொள்கைக்கு எதிரான செயல்கள் உங்களுடைய கவனத்திற்கு வந்ததுண்டா? அது எவ்வாறு மக்களாட்சியைத் தடை செய்கிறது என்பதைப் பற்றிக் கலந்துரையாடவும்.

உலகத்தில் காணப்படும் ஆட்சி முறைகளில் மிகவும் சிறந்தது மக்களாட்சி முறை யாகும். இதன்வாயிலாக ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆட்சியில் பங்கு பெற வாய்ப்பு கிடைக்கிறது. மக்களாட்சி செயல்பாடுகளை வலுப்பெறச் செய்ய நாம் கவனம் கொள்ள வேண்டும்.

## தொகுப்பு

- மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே மக்களாட்சி.
- மக்களாட்சி என்பது ஒரு ஆட்சிமுறை மட்டுமல்ல; ஒரு வாழ்க்கை முறையும் கூட ஆகும்.
- தேர்தல்கள், சட்டம், மனித உரிமைகள், சமூகப் பொருளாதார நீதி, ஊடகங்கள், எதிர்க்கட்சி போன்ற சூழ்நிலைகள் மக்களாட்சியை நிலைபெறச் செய்கின்றன.



## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- பல கருத்துகளை ஒப்புமைப்படுத்தி மக்களாட்சியைப் பற்றிய கருத்துகளைப் பெறுகின்றனர்.
- தேர்தலின் நிலைகளை விவரிக்கும் திறனை அடைகின்றனர்.
- மக்களாட்சியின் நிலைபேற்றிற்குத் தேவையான அடிப்படைச் சூழல்களைப் புரிந்துகொள்கின்றனர்.
- மக்களாட்சி ஒரு ஆட்சி முறை என்பதுடன் ஒரு வாழ்க்கை முறையும்கூட எனவும் சமூகத்தின் பொதுவான நன்மைக்கு இன்றியமையாதது எனவும் புரிந்துகொள்கின்றனர்.



## மதிப்பிடலாம்

- மக்களாட்சியின் மூன்று தனித்தன்மைகளை எழுதவும்
- மக்களாட்சியின் சுமூகமான முன்னேற்றத்திற்குச் சாதகமான சில சூழல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A | - | தேர்தல் | B | - | நீதிமன்றங்கள் |
| C | - | மனித உரிமைகள் | D | - | சமூகப் பொருளாதார நீதி |
| E | - | ஊடகங்கள் | F | - | எதிர்க்கட்சி |

கொடுக்கப்பட்டிருக்கும் கூற்றுகள் எந்தச் சூழலோடு தொடர்புடையன என அவற்றின் எழுத்துக்களை எழுதிக் குறிப்பிடுக.

1. போக்குவரத்து வசதிக்காக ஆற்றின் குறுக்காக ஒரு பாலம் கட்டப் பட்டது. ☐
2. ஒரு நபருக்கு குறிப்பிட்ட தகுதி உண்டு எனில் எந்தப் பதவியிலும் அமரும் வாய்ப்பு உண்டு ☐
3. குற்றவாளிக்கு நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது ☐
4. பொதுச் சேவை செய்பவரின் ஊழல் எல்லா தொலைக்காட்சி சானல்களிலும் முக்கிய செய்தியாக ஒளிபரப்பப்பட்டது ☐
5. மக்கள் அவர்களது பிரதிநிதிகளை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கிறார்கள் ☐

- மக்களாட்சி நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு சூழலை எழுதவும்



## தொடர் செயல்பாடுகள்

- உங்களது வகுப்புத் தலைவர் தேர்தல் தொடர்பாக ஓர் அறிக்கை தயாரிக்கவும் (வேட்பு மனு, தேர்தல் முறை, வேட்பாளர்களுக்குக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை போன்றவற்றை உட்படுத்தலாம்.)
- தேர்தல், சட்டம் ஆகியவை தொடர்பான பத்திரிகைச் செய்திகளைச் சேகரிக்கவும்.
- மக்களாட்சியைப் பற்றிய தலைவர்களின் கருத்துகளைச் சேகரித்துச் சுவர் படம் தயாரிக்கவும்.
- உங்களது வார்டு உறுப்பினர் / கவுன்சிலருமாக நேர் காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரிக்கவும். (முன்னேற்றச் செயல்பாடுகளுடன் தொடர்புடையவை)
- மக்களாட்சியில் தேர்தலின் முக்கியத்துவத்தைக் குறித்து ஒரு சிறு குறிப்பு தயாரிக்கவும்.
- தேர்தலுடன் தொடர்புடைய செய்திகளையும் படங்களையும் சேகரித்துக் கொளாஷ் (செய்தித் துணுக்கு) தயாரிக்கவும்.



10

# கேரளக் கரையில்

கேரளம் இயற்கை எழிலால் அருள் பெற்ற நாடாகும். நதிகளும் குன்றுகளும் ஏரிகளும் கடற்கரையும் பல வகையான தாவரங்கள் மற்றும் உயிரின வகைகளும் மிதமான காலநிலையும் கேரளத்தின் தனிச் சிறப்புகளாகும்.




புகழ்பெற்ற எழுத்தாளரான திரு. எஸ். கே. பொற்றைக்காடு கேரளத்தைப்பற்றி வர்ணித்து கூறுவதைப் பாருங்கள்.

கேரளமே உன் செல்லப்பெயர்
கேட்கையிலே - என்
உள்ள மெல்லாம் புல்லரிக்கிறதே
பச்சைப் பசேலென்ற வயல்வெளிகளும்
நீண்டு கிடக்கும் நாட்டுப்புறப்
பகுதிகளும்
இளம் புற்களால் பொதிந்த குன்றுப்
பகுதிகளும்
வளைந்து நெளிந்த நீரமர்ப்
பொய்கைகளும்
வெள்ளிப் பூத்த நடு இரவும் மற்றும்
பூத்திருவாதிரை நிலாவும் . . . . . . . . .

இவ்வளவு அழகான நம்முடைய மாநிலத்தைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ள வேண்டாமா?

இந்தியாவின் தென் எல்லையாகக் கிழக்கில் மேற்குத்தொடர்ச்சி மலைக்கும் மேற்கே அரபிக்கடலுக்கும் இடையே அமைந்துள்ள நிலப்பகுதியாகும் கேரள மாநிலம்.

கீழே தரப்பட்டுள்ள நிலப்படத்தைக் கூர்ந்து கவனியுங்கள். (படம் : 10– 1)




(படம் : 10 – 1)

- கேரளாவின் அண்டை மாநிலங்கள் எவை?
- கேரளாவில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?
- மிகச் சிறிய மாவட்டம் எது?
- கடற்கரைப்பகுதியில்லாத மாவட்டங்கள் எவை?
- 

இதுபோன்ற அதிகமான வினாக்கள் இந்நிலப்படத்திலிருந்து உருவாக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் நீங்கள் கண்டுபிடிக்கும் விடையினைக் குறிப்பேட்டில் எழுதவும். உருவாக்கிய வினாக்களைப் பயன்படுத்தி வகுப்பில் வினாவிடைப்போட்டி நடத்தலாம்.


## இயற்கை அமைப்பு

மேற்கில் அரபிக் கடலோடு சேர்ந்த மணல் நிறைந்த பகுதிகளிலிருந்து குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் கடந்து கிழக்கு எல்லையில் போய்ச் சேரும்போது ஆர்ப்பரித்தொழுகும் காட்டாறுகளும் உயரமான சிகரங்களும் உட்பட்ட பலவிதமான நிலத்தோற்றமே நம்முடைய சிறிய கேரளத்திற்கு உள்ளது.

கடல் மட்டத்தில் இருந்துள்ள உயரத்தை அடிப்படையாகக் கொண்டு கேரளாவின் இயற்கை அமைப்பை மூன்றாகப் பிரிக்கலாம்.

நிலப்படம் (படம் : 10 -2) கூர்ந்து கவனித்துக் கேரளாவின் இயற்கை அமைப்பு பிரிவுகள் எவையெல்லாம் என எழுதுக..

- மலைநாடு
- 
- 


கேரள
இயற்கை அமைப்பு
கர்நாடகம்
தமிழ்நாடு
லட்சத்தீவு கடல்
N
W
E
S
0 25 50 100 கி. மீ
குறிப்பு
கடற்கரைப் பகுதி <7.6 m
இடைநாடு 7.6 m - 76 m
மலைநாடு > 76 m
75°0'0"E
76°0'0"E
77°0'0"E
78°0'0"E
13°0'0"N
12°0'0"N
11°0'0"N
10°0'0"N
9°0'0"N

படம் 10.2

# மலைநாடு



கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 75 மீட்டருக்கும் அதிகமான உயரமுள்ள பகுதியே மலைநாடு. உயரமான மலைகளும் மலைத்தொடர்களும் நிறைந்த இப்பகுதியிலிருந்து நம்முடைய நதிகள் எல்லாம் உற்பத்தியாகின்றன. இவ்வியற்கை அமைப்புப் பிரிவின் பெரும் பகுதியும் காடுகளே.

## சகியமலையின் மடியில்

தெற்கு கன்னியாகுமரி முதல் வடக்கு குஜராத் வரை பரந்து கிடக்கும் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியே கேரளாவின் மலைநாடு ஆகும். கடுவாய், புலி இவையல்லாமல் வரையாடு, சிங்கவால் குரங்கு, கொடிய விஷமுள்ள ராஜவெம்பாலை போன்ற பாம்புகள், பலவகையான பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் போன்ற அபூர்வமான உயிரினங்களும் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் உள்ளன.


மலைமுழக்கி வேழாம்பல்


வரையாடு

ஈட்டி, அகில், சந்தனம், இரத்த சந்தனம் (சிவப்பு சந்தனம்) போன்ற மரங்க ளும், பலவகை ஆர்க்கிடுகளும் நிறைந்த பகுதியே மேற்குத் தொடர்ச்சி மலை. இப்பகுதிக்கு சகிய மலைத் தொடர் என்ற பெயரும் உண்டு.

மேற்குத்தொடர்ச்சி மலை மற்றும் அங்குள்ள உயிரினங் கள் தொடர்பான படங்களை இணையதளத்திலிருந்து சேக ரித்துச் சமூக அறிவியல் ஆய்வுக் கூடத்தில் உள்ள கணினியில் ஒரு டிஜிட்டல் படத்தொகுப் பைத் தயார் செய்க.

## அமைதிப் பள்ளத்தாக்கில் . . .



பாலக்காடு மாவட்டத் தில் மண்ணார்க்காடு தாலுகாவில் உட்படும் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள வனப் பகுதி அமைதிப் பள்ளத்தாக்கு எனப் படும். சில்வண்டுகள் மிக அரிதாகவே இங்கு காணப்படுவதால் இப்பகுதிக்கு அமைதிப்பள்ளத்தாக்கு என்ற பெயர் வரக் காரணமாயிற்று. இன அழிவு பாதிப்பில் உட்பட்ட சிங்கவால் குரங்கு கள் முதலான ஏராளம் தாவர உயிரினங் களின் வாழ்விடமாகும் இவ்வனப்பகுதி.

## இடைநாடு



கடல் மட்டத்திலிருந்து ஏறத் தாழ 8 மீட்டர் முதல் 75 மீட்டர் வரை உயரமுள்ள நிலப்பகுதிகள் உட்படுபவை இடைநாடு எனப் படும். சிறிய குன்றுகளும், பள்ளத் தாக்குகளும், நதிக்கரைகளும் சேர்ந்த பகுதியே இடைநாடு. இடைநாட்டின் கிழக்கிலும், மேற்கிலும் எல்லைகளாக அமைந் துள்ள நிலப்பகுதிகள் எவை யென நிலப்படத்திலிருந்து கண்டுபிடிக்கவும்.

## கடற்கரைப் பகுதி



கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 8மீட்டர் வரை உயரமுள்ள பகுதி கடற்கரைப் பகுதி எனப்படும். பொதுவாக மணல் நிறைந்த நிலப்பகுதியாகும்.

## காலநிலை



கேரளாவில் மிதமான காலநிலை அனுபவப்படுகிறது. மிகக் கூடுதலான வெப்பமோ, குளிரோ கேரளாவில் அனுபவப்படாமல் இருப்பதற்கான காரணம் கடலின் அருகாமையாகும்.



தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் கேரளத்தில் மிக அதிகமான மழை கிடைக்கிறது. ஜூன் மாதத்தில் தொடங்கும் இந்த மழைக்காலம் இடவப்பாதி அல்லது காலவர்ஷம் என அறியப்படுகிறது.

வடகிழக்குப் பருவக்காற்று மழைக் காலத்தைத் துலாவருஷக் காலம் என அழைக்கின்றனர். இக்காலத்தின் சிறப்பு மாலைவேளையில் இடியுடன் கூடிய மழை பெய்வதாகும்.



எந்தெந்த மாதங்களில் கேரளாவில் துலாவருஷம் அனுபவப் படுகிறது?

டிசம்பர் மாதத்திற்குப் பிறகு கேரளாவில் சிறிய அளவில் குளிர்காலம் தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து பிப்ரவரி முதல் மே மாதம் வரை நீண்ட கோடைக்காலமாகும். கோடைக்காலத்தின் என்னென்ன சிறப்புத் தன்மைகள் உங்களுக்கு அனுபவப்படுகின்றன?

- நதிகளில் நீரோட்டம் குறைகிறது
-



## நதிகள்

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி 44 நதிகள் கேரளத்தின் வழியாகப் பாய்கின்றன. இவற்றுள் கபினி, பவானி, பாம்பார் என்னும் நதிகள் கிழக்கு நோக்கிப் பாய்கின்றன.கேரளாவின் மிகப் பெரிய நதி பெரியாறு ஆகும்.

சமூக அறிவியல் ஆய்வுக் கூடத்தில் உள்ள நிலப்படங்களை உற்றுநோக்கிக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையைக் கண்டுபிடிக்கவும்.

- உங்களது மாவட்டத்தின் வழியாகப் பாயும் நதிகள் எவை?
- கேரள மாநிலத்தில் உள்ள நதிகள் உற்பத்தியாகுவது எந்த இயற்கை அமைப்புப் பிரிவில்?

நதிகளினால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

- குடிநீர்
- 

இந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்த நதிகளின் இன்றைய நிலை?

படத்தை உற்றுநோக்கவும்.



கேரளாவிலுள்ள நதிகள் தற்காலத்தில் மாசடைதலுக்குட்படுகின்றன.

உங்களுடைய பகுதியில் உள்ள நதிகள் இது போன்ற ஆபத்துக்களை எதிர்கொள்கின்றனவா? வேறு என்னென்ன பிரச்சினைகளை உங்கள் பகுதியிலுள்ள நதிகள் எதிர்கொள்கின்றன?

- கரைப்பகுதி இடிந்து விழுதல்
- 



### புனர்ஜென்மம்



25 ஆண்டுகளுக்கு முன்பு வற்றி வறண்டுபோன அட்டபாடியில் உள்ள கொடுங்கரப்பள்ளம் ஆறு மீண்டும் ஒழுகத் தொடங்கியுள்ளது. தமிழ் நாட்டின் எல்லைப் பகுதியிலுள்ள பெருமாள்முடியிலிருந்து உற்பத்தியாகி பவானி ஆற்றில் போய்ச்சேரும் ஆறு தான் கொடுங்கரப்பள்ளம் ஆறு. வனங்களை அழித்தது தான் இவ்வாற்றின் அழிவிற்குக் காரணமாகியது. மழைக் குழிகள், தடையணைகள் அமைத்தல், காடுகளை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளால் இந்நதியில் நீர் ஒழுக்கு மீண்டும் ஏற்பட்டு அட்டபாடி பகுதிகளில் ஒழுகிக் கொண்டிருக்கிறது.

உங்களுடைய மாநிலத்தில் உள்ள நதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விவரங்களைச் சேகரித்துக் குறிப்பு தயார் செய்யவும்.



இவ்வளவு அதிகமான நதிகள் கேரளாவில் இருந்தபிறகும் கோடைகாலத்தில் கடினமான நீர்ப்பற்றாக்குறை அனுபவப் படுகிறது. இதன் காரணம் என்ன?

## காயல்கள்



கடலோடு சேர்ந்து காணப் படும் பெரிய நீர்ப்பரப்பு களே காயல்கள். ஆலப் புழை, கோட்டயம், எர்ணா குளம் போன்ற மாவட்டங் களில் பரந்து விரிந்து காணப் படும் வேம்பநாட்டுக் காயல்

கேரளாவின் மிகப் பெரிய காயலாகும். மீன்பிடித்தல், சிப்பி வாருதல், கயிறு உற்பத்தி, சுற்றுலா செல்லுதல் போன்றவற்றிற்குக் காயல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## ஏரிகள்

கரைப்பகுதியால் சூழப்பட்ட பெரிய நீர்ப்பரப்புகள் ஏரிகள் எனப்படும். கொல்லம் மாவட்டத்தில் உள்ள சாஸ்தான்கோட்டை ஏரிதான் மாநிலத்திலுள்ள மிகப் பெரிய சுத்தநீர் ஏரியாகும்.



காயல்களும் ஏரிகளும் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. அவை எவை?

- தொழிற்சாலை கழிவுகளைக் குவித்தல்
- 

நதிகளும் காயல்களும் ஏரிகளும் கேரள மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. வரலாற்றோடும், நாகரிகத்தோடும் முக்கியத்துவம் பெற்ற பல இடங்களும் நதிக்கரைகளில் அமைந்துள்ளன. நம்முடைய நாட்டு மக்களின் நாகரிகத்தோடு ஒருங்கிணைந்து நிற்கும் இந்த நீர்ப்பரப்புகள் பாதுகாக்கப்படவேண்டியவை அல்லவா?

## வேளாண்மையும் மக்கள் வாழ்க்கை முறையும்

கேரளா வேளாண்மை முக்கியத்துவம் பெற்ற ஒரு மாநிலமாகும். செழிப்பான மண்ணும் தாராளமாகக் கிடைக்கும் மழையும் கேரளாவில் வேளாண்மைக்கு



அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன.

கடற்கரைப்பகுதிகளில் தேங்காய், நெல் போன்ற விளைபொருட்கள் முக்கியமாகப் பயிர் செய்யப்படுகின்றன. இங்குள்ள காயல்கள் மீன்பிடித்தலுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் இடைநாட்டில் பலவகையான விளைபொருட்கள் பயிர் செய்யப்படுவதைக் காணலாம். நெல், தேங்காய், வாழை, சேனை,சேம்பு மற்றும் பாக்கு, ரப்பர், காப்பி, நல்லமிளகு போன்ற விளைபொருட்கள் இங்கு பயிர்செய்யப்படுகின்றன..

மலைநாடு பகுதிகளில் காணப்படும் குளிர்ந்த காலநிலை தேயிலை, ஏலம், நல்லமிளகு போன்ற விளைபொருட்களுக்கு மிகப் பொருத்தமானதாகும்.

கேரளாவின் தேசிய பண்டிகையான ஓணம் சிங்கமாத (ஆவணி மாதம்) பயிர் அறுவடையோடு தொடர்புடையது என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? விசுக் கணி வேளாண் பலன்களை வைத்துக் காட்சியாகக் காண்பதும் (கணி), சித்திரை பத்தில் விதையிடுவதும் கேரள மக்களின் பண்பாட்டில் விவசாயத்திற்குள்ள முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

நம்முடைய வேளாண் பண்பாடும், வேறுபட்ட பயிர் இனங்களும் தகுந்த முறையில் நிலைநிறுத்தப்பட்டால் மட்டுமே இத்தகைய விழாக்கள் அர்த்தமுடையதாகும்.

வேளாண்மையுடன் தொடர்புடைய பழமொழிகளைச் சேகரிக்கவும்..



## அழிந்துபோகும் பயிரினங்கள்

மலையாளிகள் பாரம்பரிய விளைபொருட்களுக்குப் பதிலாக ரப்பர் போன்ற வேளாண் முக்கியத்துவம் பெற்ற பயிர்களைப் பயிர் செய்கின்றனர். உயர்கல்வியைப் பெறுவதால் தங்கள் தகுதிக்கேற்ற தொழிலைத் தேடிப் போகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இச்செயல்பாடு இளைஞர்களுக்கு வேளாண்மையோடுள்ள தொடர்பைக் குறைக்கிறது. மேலும் பாரம்பரியமான விளைபொருள்களை உற்பத்தி செய்வதில் விருப்பமில்லாமை இன்று கேரளாவின் ஒரு பிரச்சனையாக மாறியுள்ளது. இதற்கு ஒரு மாற்றம் வேண்டாமா? - கலந்துரையாடவும்.



உங்களுடைய வீட்டில் உணவு தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் விளைபொருட்கள் எவை? இந்த விளைபொருட்களை உங்களுடைய நாட்டில் பயிர் செய்யப்படுபவை மற்றும் பிற மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படுபவை என அட்டவணைப் படுத்தவும்.

## எனது தோட்டம்

உங்களுடைய வீட்டின் சுற்றுப்புறங்களிலும் பள்ளிக்கூடச் சுற்றுப்புறங்களிலும் பயிர் செய்யுங்கள். வீட்டிற்குத் தேவையான காய்கறிகள், நெல் ஆகியவற்றைப் பயிரிட்டு உற்பத்தி செய்வது மகிழ்ச்சியான அனுபவமாகும். இதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?

- விஷம் சேர்க்காத காய்கறிகள்
- 


## போக்குவரத்து

கேரளாவில் ஒவ்வொரு இயற்கை அமைப்புகளுக்கும் தகுந்தவாறு போக்குவரத்துமுறை உருவாக்கப்பட்டுள்ளது. காயல்கள், ஏரிகள், நதிமுகங்கள் உட்பட்ட கடற்கரைப் பகுதியில் நீர்ப்போக்குவரத்து முக்கியமானதாக உள்ளது. திருவனந்தபுரம் முதல் ஹோஸ்துர்க் வரை நீண்டு கிடக்கும் நீர் போக்குவரத்து நமக்கு உள்ளது. மீன்பிடித்தல், போக்குவரத்து, நாட்டுப் பாதுகாப்பு போன்ற தேவைகளுக்காகத் துறைமுகங்கள் விரிவாக்கப்பட்டன.



காயல்களுக்கு இடையே பாலங்கள் அமைக்கப்பட்டதால் கடற் கரைப் பகுதிகளுக்கு ரயில் பாதைகளும்

தேசிய நெடுஞ்சாலைகளும் கேர ளத்தில் உருவாயின. இடைநாட்டிலும் மலை நாட்டிலும் சாலைப்போக்கு வரத்து அதிகமாகக் காணப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள கணவாய்கள் வழியாகத் தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இச்சாலைகள் நீண்டு செல்கின்றன. திருவனந்தபுரம், கொச்சி, கோழிக்கோடு போன்ற விமான நிலையங்களில் இருந்து இந்தியாவின் பல பகுதிகளுக்கும் அயல்நாடுகளுக்கும் விமானப் போக்குவரத்து உள்ளது. நிலப்படம் 10 - 3 கூர்ந்து கவனிக்கவும்.




படம் 10.3

- கேரளாவில் ரயில் போக்குவரத்து இல்லாத மாவட்டங்கள் எவை? ஏன்?
- தேசிய சாலைகள் அதிகமாகக் காணப்படும் இயற்கை அமைப்புப் பகுதி எது? காரணம் என்ன?

## கடவுளின் சொந்த நாடு

பச்சைப் பசேலென்ற குன்றுகளும் மலைகளும் நிறைந்த நிலத்தோற்றம், ஏராளமாகக் கிடைக்கும் மழை, அனேக நதிகள், சுகமான காலநிலை, உயர்ந்த எழுத்தறிவு, நாகரிகமான மக்கள் . . . . . இத்தகைய வளமையான நம்முடைய கேரளாவின் பல்வேறுபட்ட செல்வங்களை வருங்காலத் தலைமுறைக்காகச் சேமித்து வைக்கவேண்டும் என்பது நம் ஒவ்வொ ருவருடைய கடமையாகும். அதற்கு வேண்டிய செயல்பாடுகளில் நாம் பங்குபெற வேண்டும்.



## தொகுப்பு

- இந்தியாவின் தென்பாகத்தில் அரபிக்கடலின் கரையோரத்தில் அமைந்துள்ள சிறிய மாநிலமாகும் கேரளம்.
- மலைநாடு, இடைநாடு, கடற்கரைப்பகுதி என வேறுபட்ட நில அமைப்பு கள் கேரளாவில் உள்ளது.
- கேரளாவில் இடையிடையே அனுபவப்படும் மழைக்காலமும் கோடைக்காலமும் பல்வேறு வேளாண் விளைபொருட்களின் உற்பத் திக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்குகிறது.
- வேளாண்மையைக் கொண்ட கலாச்சாரம் கேரளாவிலுள்ளது. கேரளா விலுள்ளது.



## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- கேரள மாநிலத்தின் அமைவிடம், எல்லைகள், மாவட்டங்கள் என்பவை களைப் புரிந்துகொள்கின்றனர்.
- கேரளத்தின் பல்வேறு இயற்கை நில அமைப்புப் பகுதிகளைப் புரிந்துகொள்கின்றனர்.
- மேற்குத்தொடர்ச்சிமலைப் பகுதியின் முக்கியத்துவத்தைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- மேற்குத்தொடர்ச்சிமலைப் பகுதிகளில் காணப்படும் தாவரங்கள், உயிரினங்கள் குறித்த படத்தொகுப்பு தயார்செய்கின்றனர்.
- கேரள மாநிலத்தின் பருவ காலங்களைப் பற்றிய முடிவுகளை உருவாக்குகின்றனர்,
- தமது மாவட்டத்தின் வழியாகப் பாய்கின்ற ஆறுகளின் உற்பத்தி இடம், செல்லும் பாதை போன்றவற்றை ஓவியமாகத் தீட்டுகின்றனர்.

- ஆறுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- ஆறுகள் மற்றும் காயல்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்து வத்தைப் பல்வேறு வழிகளில் வெளியிடுகின்றனர்.
- வேளாண்மையின் அடிப்படையில் கேரளப் பண்பாடு உருவமைக்கப் பட்டுள்ளது என்ற முடிவுக்கு வருகின்றனர்.
- நில அமைப்பின் தனித்தன்மைகளுக்கு ஏற்பக் கேரளத்தில் வடிவமைக்ப்பட்டுள்ள போக்குவரத்து முறைகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.



## மதிப்பிடலாம்

1. 'நில அமைப்பிற்குப் பொருத்தமான வேளாண் விளைபொருட்கள் கேரளத்தில் உள்ளன. இக்கூற்றிற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு களைக் கண்டறிந்து எழுதுக
2. கேரளாவில் உள்ள நதிகள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொள் கின்றன. உங்களுடைய பகுதியில் உள்ள நதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பு தயார் செய்க.
3. கேரளாவின் காலநிலைச் சிறப்புகளை எழுதுக ?
4. கேரளாவின் கிழக்குப் பகுதியில் ரயில் போக்குவரத்து இல்லாததற்கு காரணம் என்ன?



## தொடர் செயல்பாடுகள்

காகித அட்டையும் களிமண்ணும் பயன்படுத்திக் கேரளத்தின் இயற்கை அமைப்பின் மாதிரியை உருவாக்குக..

**தேவையான பொருட்கள்**

30 செ.மீ x 30 செ.மீ அளவுள்ள காகித அட்டை
களிமண்
பென்சில்
வாட்டர் கலர்
மார்க்கர் பேனா

30 செ.மீ நீளமும் 30 செ.மீ அகலமும் உள்ள காகித அட்டைத் துண்டை எடுத்து அதில் கேரளாவின் திட்டவரைவு படத்தை வரையவும். களிமண்ணைப் பிசைந்து இந்த திட்டவரைவில் கேரளாவின் மாதிரியை உருவாக்கவும். இயற்கை அமைப்பு பிரிவுகளை அடையாளப்படுத்தி நிறம் கொடுக்கவும். மலைநாடு, இடைநாடு, கடற்கரைப்பகுதி என்ற பெயர்களை மார்க்கர் பேனாவினால் எழுதி அந்தந்த நிலப்பகுதிகளில் ஒட்டவும்.



11

# நமது இந்தியா



பள்ளிக்கூடக் காலைக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழியை சிறிது நினைவுக்குக் கொண்டு வாருங்கள். அந்த உறுதிமொழி தொடங்குவது இவ்வாறல்லவா?

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர். எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன் . . .

இந்தியாவின் பல்வகைப் பரம்பரைப் புகழில் இந்தியராகிய நாம் பெருமை கொள்கிறோம். ஆடை, மொழி, பழக்கவழக்கங்கள் போன்றவற்றால் ஏற்படுகின்ற வேறுபாடுகள் தான் இந்தியாவை ஒரு தனிச்சிறப்பு கொண்ட நாடாக்குகின்றன. இயற்கை அமைப்பு, கால



நிலை தாவரம் மற்றும் உயிரினங்கள், மக்கள் வாழ்க்கை ஆகியவற்றில் ஒரு வேறுபாட்டைக் காணலாம். இத்துணை வேறுபாடுகள் இருந்தபோதிலும் ஜாதி, மதம், மொழி வேறுபாடின்றி ஒரு தாய் மக்களைப் போன்று ஒற்றுமையோடு இந்தியர்களாகிய நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்தியாவிலுள்ள வேற்றுமைகளைப் பற்றிக் கூடுதலாக நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? இப்பாடம் அதற்கு வழி வகுக்கிறது.

## இந்தியா-அமைவிடம் மற்றும் அண்டை நாடுகள்

முந்தைய பாடப்பகுதியில் பெருங்கண்டங்களைப் பற்றி நாம் விவாதித்தோமல்லவா? இந்தியா எந்தப் பெருங்கண்டத்தில் அமைந்துள்ளது என்று கூறலாமா?

ஆசியா கண்டத்தின் நிலப்படத்தில் இருந்து இந்தியாவுடன் சேர்ந்து காணப்படும் அண்டை நாடுள் எவையெல்லாம் என்று கண்டுபிடிக்கவும்.

இதற்காக நிலப்படப் புத்தகம் மற்றும் சுவர் நிலப்படங்களைப் பயன் படுத்தலாம்.


நிலப்படத்தில் (படம் 11-1) இந்தியாவின் தென்பகுதி பெருங்கடலால் சூழப்பட்டிருப்பதைப் பார்த்தீர்கள் அல்லவா? இப் பெருங்கடல் இந்தியப் பெருங்கடல் எனப்படும். இந்தியாவின் கிழக்கில் காணப்படும் இப்பெருங்கடல் பகுதியை வங்காள விரிகுடா என்றும், மேற்கில் காணப்படும் பகுதியை அரபிக்கடல் என்றும் அழைக்கிறோம்.

## இந்தியா - மாநிலங்கள்

ஆட்சி வசதிக்காக இந்தியா 28 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்தினுடைய ஆட்சிமையம் அம்மாநிலத்தின் தலைநகரமாகும்.

இந்தியாவின் நிலப்படத்தை (படம் 11-1) உற்றுநோக்கி 28 மாநிலங்களையும் அவற்றின் தலைநகரங்களையும் கண்டுபிடிக்கவும்.

நாட்டின் மொத்த ஆட்சியை நிர்வகிக்கும் தேசிய தலைநகரம் புதுடில்லி ஆகும்.



இந்தியா
அரசியல் நிலப்படம்
250 0 250 Kilometres
N
ஸ்ரீநகர்
ஜம்முகாஷ்மீர்
இமாச்சல பிரதேசம்
சிம்லா
பஞ்சாப்
சண்டிகர்
டேராடூண்
உத்ராகண்ட்
ஹரியான
டில்லி
புதுடில்லி
ராஜஸ்தான்
ஜெய்ப்பூர்
லக்னோ
உத்திரபிரதேசம்
சிக்கிம்
காங்டோக்
அருணாச்சலபிரதேசம்
இட்டாநகர்
அஸ்ஸாம்
நாகாலாந்து
திஸ்பூர்
கொஹிமா
ஷில்லாங்
மேகாலயா
இம்பால்
மணிப்பூர்
அகர்தலா
திரிபுரா
ஐஸ்வால்
மிசோரம்
பாட்னா
பீகார்
ஜார்கண்ட்
ராஞ்சி
மேற்குவங்காளம்
கொல்கத்தா
குஜராத்
காந்திநகர்
போபால்
மத்தியபிரதேசம்
சத்தீஸ்கட்
ராய்ப்பூர்
ஒடிசா
புவனேஸ்வர்
மகாராஷ்டிரம்
மும்பை
ஹைதராபாத்
ஆந்திரபிரதேசம்
பனாஜி
கோவா
கர்நாடகம்
வங்காள விரிகுடா
அரபிக்கடல்
பங்களூரு
சென்னை
லட்சத்தீவு
தமிழ்நாடு
கேரளம்
திருவனந்தபுரம்
அந்தமான் நிக்கோபார் தீவுகள்
சர்வதேச எல்லை
மாநில எல்லை
மாநில தலைநகரம்
தேசிய தலைநகரம்
இந்தியப் பெருங்கடல்


படம்–11.1

மாநிலங்கள் தவிர, பாண்டிச்சேரி, டாமன், டையூ, தாத்ரா நகர்கவேலி, சண்டிகர், லட்சத்தீவு, அந்தமான் நிக்கோபார் தீவுகள் எனும் ஆறு மத்திய ஆட்சிப் பகுதிகளும் இந்தியாவில் உள்ளன.

நிலப்படம் (படம் 11-1) உற்றுநோக்கி மத்திய ஆட்சிப் பகுதிகளையும் இந்தியாவின் தலைநகர அமைவிடத்தையும் கண்டுபிடிக்கவும்.


## இந்தியா-இயற்கையமைப்பு

மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், தீவுகள் என வெவ்வேறு நிலத்தோற் றங்கள் பூமியில் காணப்படுகின்றன. ஒரு நிலப்பகுதியில் காணப்படும் இத்தகைய சிறப்புத் தன்மைகள் அப்பகுதியின் இயற்கை அமைப்பு எனப்படும்.


சிறிய மற்றும் பெரிய மலைத்தொடர்கள், சமவெளிப்பகுதிகள், பரந்த பீடபூமிப் பகுதிகள், பாலைவனம், கடற்கரைப் பகுதிகள், தீவுகள் போன்ற பல்வேறுபட்ட நில அமைப்புகளை இந்தியா தன்னகத்தே கொண்டுள்ளது.

## இந்தியாவிலுள்ள மலைகள்

முந்தைய பாடப்பகுதியில் பெருங்கண்டங்களிலுள்ள முக்கியமான மலைத் தொடர்களைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களல்லவா?



இமயமலைத் தொடர்



மேற்குத் தொடர்ச்சிமலை

உலகத்திலேயே மிக உயரமான மலைத்தொடர்களான இமய மலையின் ஒரு பகுதி இந்தியாவில் தான் அமைந்துள்ளது. இமய மலையை விட உயரம் குறைந்த மலைத் தொடர்களான ஆரவல்லி, மேற்குத் தொடர்ச்சி மலை (சஹியாத்ரி), கிழக்கு மலைத்தொடர், விந்திய மலைத்தொடர், சத்பூரா மலைத் தொடர் முதலானவை இந்தியாவிலுள்ள முக்கிய மலைத்தொடர்களாகும். இவற்றிலிருந்து ஏராளமான நதிகள் உற்பத்தியாகின்றன.

## இந்தியச் சமவெளிகள்

சமவெளிகள் எனப்படுவது மிகப் பரந்த மற்றும் சமமான நிலப்பகுதிகளாகும். இப்பகுதிகள், இமய மலையிலிருந்து உற்பத்தியாகி வரும் நதிகள் அரித்துக் கொண்டுவரும் வண்டல்மண் படிவதால் உருவாகின்றன. சிந்து - கங்கை - பிரம்மபுத்திரா சமவெளிகள் என இச்சமவெளிகள் அழைக்கப்படுகின்றன. இந்தியாவின் தானியக்களஞ்சியம் என்றழைக்கப்படும் இச்செழிப்பான சமவெளிகளில் கோதுமை, நெல், சோளம், கரும்பு போன்ற ஏராளம் விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.


கங்கைச் சமவெளி

## இந்தியப் பாலைவனம்

வேகமாக வீசும் காற்றும், கடுமையான வெப்பமும், கண்ணுக்கு எட்டாத தூரம் வரை பரந்து கிடக்கும் மணற்குன்றுகளும் பாலைவனங்களின் சிறப்புத் தன்மைகளாகும். இந்தியாவின் வடமேற்கில் அமைந்துள்ள ராஜஸ்தான் மாநிலத்தின் பெரும் பகுதியும் பாலைவனம் ஆகும். தார் பாலைவனம் என அழைக்கப்படும் இப்பகுதி இந்தியச் சமவெளிகளின் ஒரு பகுதியாகும். மழை மிகக் குறைவாக உள்ள இப்பகுதியல் மக்கள் வாழ்க் கையும் வேளாண்மையும் குறைவாகும்.


தார் பாலைவனம்

## இந்தியப் பீடபூமிகள்


தக்காண பீடபூமி

சூழ்ந்துள்ள பகுதிகளை விட உயரமானதும் மேல் பாகம் ஏறக்குறைய சம மானதுமான நிலப்பகுதி பீடபூமி என்றழைக்கப் படுகிறது. இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பீடபூமி தக்காண பீடபூமி யாகும். மாள்வா, சோட்டா நாக்பூர் என்பன பிற முக்கி யமான பீடபூமிகளாகும்.

## இந்தியக் கடற்கரைப் பகுதிகள்


கடற்கரைப் பகுதி

கடலோடு சேர்ந்து காணப்படும் சமமான நிலப்பகுதிகள் கடற் கரைப்பகுதிகள் எனப்படும். இந்தியாவின் கடற்கரைப் பகுதி நீளம் கூடியது ஆகும்.

- இந்தியாவின் தெற்கு எல்லையில் காணப்படும் கடற்கரைப் பகுதியைக் கொண்ட மாநிலம் எது என நிலப்படத்திலிருந்து கண்டுபிடிக்கவும்.
- 

## இந்தியத் தீவுகள்

கடலால் சூழப்பட்டுக் காணப்படும் நிலப்பகுதிகள் தீவுகள் என அழைக்கப்படுகின்றன. இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் பகுதியாக ஏராளமான தீவுகள் காணப்படுகின்றன. இந்தியாவின் முக்கியத் தீவுகள் அரபிக்கடலில் காணப்படுகின்ற லட்சத்தீவும், வங்காள விரிகுடாவில் காணப்படும் அந்தமான் நிக்கோபார் தீவுகளுமாகும். அவற்றின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

நிலப்படத்திலிருந்து (படம் 11.1) லட்சத்தீவு மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் அமைவிடத்தைக் கண்டுபிடிக்கவும்.



லட்சத் தீவு



அந்தமான் நிக்கோபார் தீவுகள்

## இந்திய நதிகள்

இந்தியாவின் முக்கிய மலைத் தொடர்களைப் பற்றி நாம் கலந்துரை யாடல் நடத்தினோமல்லவா? இவற் றுள் பெரும்பாலான மலைத் தொடர் கள் ஏராளமான நதிகளின் உற்பத்திப் பகுதி களாகும். இமயமலையிலிருந்து உற்பத்தியாகி வரும் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா நதிகளும் தீபகற்ப இந்தியாவின் உயர்ந்த பகுதிகளி லிருந்து உற்பத்தியாகிவரும் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, நர்மதை, தப்தி என்பனவும் இந்தியாவின் முக்கிய நதிகளாகும்.



கங்கை நதி

## இந்தியக் காலநிலை

மிக அதிகமான வேறுபாடுகள் கொண்ட காலநிலை இந்தியாவில் அனுபவப் படுகிறது. இந்தியாவில் பருவ காலங்களை மழைக்காலம், குளிர்காலம், கோடைக்காலம் என வகைப் படுத்தலாம். ஜுன் முதல் செப்டம்பர் வரையும், அக்டோ பர் முதல் நவம்பர் வரையுமான இரண்டு மழைக் காலங்கள் இந்தியாவில் அனுபவப்படு கின்றன. அரபிக்கடலை ஒட்டிய மேற்குக் கடற்கரைப் பகுதிகளி லும் வடகிழக்கு மாநிலங் களிலும் இப்பருவகாலத்தில்



மழைக் காலம்

ஏராளமான மழை கிடைக்கிறது. மேகாலயாவிலுள்ள சிராப்பூஞ்சி இந்தியாவில் அதிகமழை கிடைக்கும் பகுதி யாகும். இந்தியாவில் வேளாண்மை மழைக் காலத்தைச் சார்ந்தே நிலை நிற்கிறது.



பனிக் காலம்


கோடைக்கால காட்சி

டிசம்பர் முதல் பிப்ரவரி வரை இந்தியாவில் பனிக்காலம் அனுபவப்படுகிறது. பனிக் காலத்தைத் தொடர்ந்து மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் இந்தியாவில் கோடைக்காலம் அனுபவப்படுகிறது.

## இந்தியா -தாவரம் மற்றும் உயிரினங்கள்

இந்தியாவின் இயற்கை அமைப்பிலும் காலநிலையிலும் ஏராளம் வேறுபாடுகள் காணப்படுகின்றன எனப் புரிந்துகொண்டீர்களல்லவா. இவ்வேறுபாடுகளுக்கு ஏற்ப தாவரங்களிலும் விலங்குகளிலும் வரும் மாற்றங்களை நமக்குக் காணலாம். மழைக்காடுகள், இலையுதிர்க் காடுகள், முள்காடுகள், புதர்க்காடுகள், புல்மேடுகள் போன்ற வனப்பகுதிகள் இந்தியாவில் காணப்படுகின்றன.


மழைக்காடுகள்


இலையுதிர்க் காடுகள்

யானை, கடுவாய், புலி, காட்டெருமை, மான், மயில், வேழாம்பல் முதலிய பல்வேறு பறவைகள் மற்றும் மிருகங்களின் வாழ்விடமாகிய இவ் வனப்பகுதிகள் இந்தியாவின் விலை மதிப்பிட முடியாத செல்வம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.


புல்மேடுகள்


முள்காடுகள்

## நாம் இந்தியர்கள்

இயற்கை அமைப்பு, காலநிலை, தாவரம் மற்றும் உயிரினங்கள் இவைகளிலெல்லாம் இந்தியாவில் ஏராளமான வேற்றுமைகள் காணப்படு கின்றன என்பதைப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? இவ்வேற்றுமைகளுக்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறையிலும் வேறுபாடுகளைக் காணலாம்.

தென்னிந்தியர்களின் முக்கிய உணவு அரிசி. வடஇந்தியர்களின் முக்கிய உணவு கோதுமை. உணவுப் பழக்க வழக்கங்களில் உள்ள வட்டார வேறுபாடுகளுக்குக் காரணம் என்னவாக இருக்கும்? வகுப்பறையில் கலந்துரையாடல் நடத்தவும்.

தென்னிந்தியர்கள் பொதுவாகப் பருத்தி ஆடைகளையே அணிகின்றனர். ஆனால் மலைப்பகுதிகளில் கம்பிளி ஆடைகளையே முக்கியமாக அணிகின்றனர். இதற்கு என்ன காரணம்?

பண்டிகைக் கொண்டாட்டங்களிலும் நாம் வேறுபாடுகளைக் காணலாம். கேரள மக்களின் முக்கிய பண்டிகை ஓணம் ஆகும். தமிழ்நாட்டில் முக்கியப் பண்டிகை பொங்கலாகும். ஒடிஷாவில் பிஹூவும், வட இந்தியாவில் ஹோலியும் . . . . . பண்டிகைக் கொண்டாட்டங்களில் காணப்படும். இத்தகைய வேறுபாடு இந்தியாவின் கலாச்சார வேறுபாட்டிலும் காணப்படுகிறது என்பதற்கான பிற எடுத்துக்காட்டுகளைக் கண்டுபிடிக்கவும்.

- மொழி
- 



நாம் வசிக்கின்ற பகுதிகளைவிட முற்றிலும் மாறுபட்ட நிலையில் இந்தியாவின் பிற பகுதிகள் காணப்படுகின்றன. நில அமைப்பு, காலநிலை, தாவரம் மற்றும் உயிரினங்கள், மக்களின் வாழ்க்கை முறையிலும் மிக அதிகமான வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் கடந்து இந்தியா ஒரே நாடாகத் திகழ்கிறது. இந்தியாவின் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நாம் நிச்சயமாகப் பெருமை கொள்ளத்தான் செய்வோம்.

## தொகுப்பு

- ஆசியா கண்டத்தின் தென்பாகத்தில் இந்தியா அமைந்துள்ளது.
- இந்தியாவில் 28 மாநிலங்களும் 6 மத்திய ஆட்சிப் பகுதிகளும் உள் ளன.
- மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், கடற்கரைப் பகுதிகள், தீவுகள் முதலானவற்றை உள்ளடக்கிய ஒரு நில அமைப்பு இந்தியாவிற்கு உள்ளது.
- சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, நர்மதை, தப்தி முதலியன இந்தியாவின் முக்கிய நதிகளாகும்.
- இந்தியாவில் பருவ காலங்களை மழைக்காலம், பனிக்காலம், கோடைக்காலம் எனப் பிரிக்கின்றனர்.
- மழைக்காடுகள், இலையுதிர்க்காடுகள், முள்காடுகள், புதர்க்காடுகள், புல்மேடுகள் என்பன இந்தியாவின் முக்கிய தாவர வகைகளாகும்.
- நிலத்தோற்றம், காலநிலை, தாவர இனங்கள், மொழி, உடை, உணவுமுறை, பழக்கவழக்கங்கள், கொண்டாட்டங்கள் எனப் பலவித வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் கடந்து இந்தியா ஒரே நாடாகத் திகழ்கிறது.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- இந்தியா ஆசியப் பெருங்கண்டத்தின் பகுதி எனவும், அதன் அமைப்பு, அமைவிடம், எல்லைகள், மாநிலங்கள் மற்றும் தலைநகரங்களையும் புரிந்துகொள்கின்றனர்.
- இந்திய இயற்கை அமைப்பின் சிறப்பம்சங்களான நிலஅமைப்பு, நதிகள், காலநிலை, தாவரம் மற்றும் உயிரினங்கள் போன்றவற்றின் வேறுபாடுகளை விவரிக்கின்றனர்.
- வேற்றுமையில் ஒற்றுமை என்ற எண்ணத்தை மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

- இந்தியாவின் கலாச்சார தனித்தன்மைகளான மொழி, ஆடைகள், பழக்கவழக்கங்கள், பண்டிகைகள், உணவுமுறை, வேளாண்மை போன்றவைகளின் வேற்றுமைகளைப் பற்றி விளக்குகின்றனர்.

## மதிப்பிடலாம்

1. கீழே தரப்பட்டுள்ள மாநிலங்களின் தலைநகரங்கள் எவையென எழுதுக.
    - அருணாச்சலப் பிரதேசம்
    - ராஜஸ்தான்
    - இமாச்சலப் பிரசேம்
    - சத்தீஸ்கர்
    - மிசோரம்
    - கோவா
2. இந்தியாவின் இயற்கை அமைப்பின் சிறப்பியல்புகளைப் பற்றி விளக்குக.
3. இமயமலையிலிருந்து உற்பத்தியாகும் நதிகளையும் தீபகற்ப இந்தியாவின் உயர்ந்த பகுதிகளிலிருந்து உற்பத்தியாகும் நதிகளையும் கண்டுபிடித்து அட்டவணைப்படுத்துக.
4. இந்தியாவின் கால நிலையின் சிறப்புத் தன்மைகளை விளக்குக.

## தொடர் செயல்பாடுகள்

- இந்தியாவின் அரசியல் நிலப்படத்தை (சுவர் நிலப்படம்) உற்றுநோக்கி 28 மாநிலங்களையும் அவற்றின் தலைநகரங்களையும் கண்டுபிடித்து அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வரிசை எண் | மாநிலம் | தலைநகரம் |
|---|---|---|
| 1 | அருணாச்சலபிரதேசம் | இட்டாநகர் |
| 2 | | |
| • | | |
| • | | |
| 28 | | |

- இந்தியாவில் ஆடை அலங்கார வேறுபாடுகள் எனும் தலைப்பில் ஒரு டிஜிட்டல் படத்தொகுப்பு தயார் செய்க.
- நிலப்படத் தொகுப்பு அல்லது சுவர் நிலப்படங்கள் (இந்தியா - இயற்கை அமைப்பு நிலப்படம்) உதவியுடன் இந்தியாவின் மலைகள், சமவெளிகள் மற்றும் பீடபூமிகளின் அமைவிடங்களைக் கண்டுபிடிக்கவும்.